
இந்திரா
சௌந்தர்ராஜன்
எட்டாம் சக்தி
தமிழ்

# எட்டாம் சக்தி

**(ஈசத்வம்)**

இந்திரா செளந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# எட்டாம் சக்தி

## 1

'அணிமா' என்னும் அணுத் துகள் போல தன்னை சிறிதாக்கிக் கொள்ளும் ஆற்றல், 'மஹிமா' என்னும் மலைபோல பெரிதாகத் தெரியும் ஆற்றல், 'இலஹிமா' என்னும் பஞ்சு போல எடையற்றுப் போகும் ஆற்றல், 'கரிமா' என்னும் இரும்பைப் போல கணக்கும் ஆற்றல், 'பிராப்தி' என்னும் அனைத்தையும் ஆண்டு அனுபவிக்கும் ஆற்றல், 'வசித்வம்' என்னும் அனைவரையும் மயக்கிக் கவர்ந்து இழுக்கும் ஆற்றல், 'பிரகாமியம்' என்னும் கூடுவிட்டு கூடுபாயும் ஆற்றல் என்று ஏழுவித சக்தியைத் தொடர்ந்து எட்டாவதாக வருவது 'ஈசத்வம்' என்னும் இறை தன்மை அடையும் ஆற்றலாகும். அதாவது தாயும் தந்தையும் காமத்தால் கூடி அதன் பயனாய் ஒரு சதைப் பிண்டமாய் இந்த மண்ணிற்கு வந்த ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றியறிந்து பின் உலகைப் பற்றியறிந்து, அதற்குப் பின் தன் பகுத்தறிவால் மேலே கண்ட அஷ்டமா சித்துகளில் ஏழினையும் குறைவரப் பெற்று, அதன் காரணமாக ஒரு தெளிவும், நிறைவும் பெற்று இறுதியாக அந்த ஏழு ஆற்றல்களையும் பயன்படுத்தி வாழ முற்படும்போது அவர் பிறர் கண்களுக்கு கடவுளாகத் தெரிவார்.

கடவுளே ஆட்டுவிக்கத் தெரிந்தவன்!

கடவுளே அண்ட சராசரங்களையும் கட்டி ஆள்பவன்! கடவுள் நினைத்தால் வானம்கூட கிழியும்; பூமிகூட ஒரு

***மை புள்ளி அளவு சின்னதாகிப் போகும். நட்சத்திரங்கள் எல்லாமும் ஒரு மாலைபோல் கட்டிக் கொண்டு கழுத்தில் வந்து விழும்.***

***இதைவிட ஒரு உயர்ந்த நிலை ஒருவருக்குக் கிட்டாது எனும்போது அவரைப் பார்த்து நாம் சொல்லும் ஒரு வார்த்தையே கடவுள்!***

***அந்த கடவுளாக பிறர் கண்ணுக்கு ஒருவன் தெரிவது தான் "ஈசத்வம்" என்னும் எட்டாம் சக்தி.***

சென்னை விமான நிலையம்

வானத்தில் மிதந்து வந்து, சீற்றலோடு தரையைப் பற்றிய பின் தலை தெறிக்கும் வேகத்துடன் ஓடி, அதற்கும் பின் அந்த வேகம் குறைந்துபோக ஒரு மாட்டு வண்டியின் நிதானத்துக்கு வந்து அதற்குப்பின் அதுவுமற்றுப்போய் பறந்ததும், ஓடியதும் போதும் என்பது போல தேங்கி நின்றது அந்த விமானம்.

மொழு மொழுவென்று திமிங்கலம் போல ஒரு உடம்பு. கண்ணைப் பறிக்கும் மெட்டாலிக் பெயிண்டின் பளபளப்பு; ஐந்தாறு லாரிகளை தொட்டுத் தொட்டு வரிசையாக நிறுத்தியது போல ஒரு நீளம்.!

அந்த விமானத்தை பார்த்தபடி நின்று கொண்டிருந்த ரம்யா கொஞ்சம்போல பரவசமாகிப போனாள். யானை, ரயில், விமானம், இதெல்லாம் எப்பொழுது பார்த்தாலும், எத்தனை தடவை பார்த்தாலும் அலுக்காதவை என்று யாரோ சொன்னது அவள் ஞாபகத்தில் எதிரொலித்தது!

தேங்கி நின்ற விமானத்தில் இருந்து அதில் பயணம் செய்தவர்கள் இறங்க ஆரம்பித்திருந்தார்கள். பெரும்பாலும் அந்த விமானப்படி என்பது, கண்களை விட்டு வெகு தூரம் போய் விட்டவர்களை, காலத்தால் பிரிக்கப்பட்டவர்களை, வெளிக் காட்டுவதில் நிகரில்லாதது என்றுதான் சொல்ல வேண்டும்.

அதனாலோ என்னவோ பலரது விழிகள் அந்த இடத்தை அப்படி ஒரு பார்வை பார்க்கின்றன. ரம்யாவும் பார்த்தாள்!

மூன்று வருஷங்கள். அதாவது ஆயிரம் நாட்களுக்கும் மேல் தன்னை விட்டுப் பிரிந்து தென் ஆப்பிரிக்க நாட்டுப் பக்கம் மருத்துவ சேவை செய்யப் போய்விட்ட அனந்தகிருஷ்ணனுக்காக!

அனந்துவுக்கு சர ராசி. அதனால்தான் ஹைஸ்கூலுக்கு பிறகு இந்த இந்திய மண்ணில் அவனால் இருக்க முடியவில்லை.

கல்லூரிப் படிப்பு டெல்லியில்..!. மேற் படிப்பு லண்டனில்! மருத்துவம் ஜெர்மனியில்! அதில் ஒரு சிறப்புப் படிப்பு அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியாவில். இறுதியில் தென் ஆப்பிரிக்க அரசின் சிறப்புத் தேர்வில் அந்த நாட்டு பின்தங்கிய கிராமங்களில் மருத்துவ விழிப்பை ஏற்படுத்தும் 'மெடி ஜெய்ன்ட்' என்னும் அமைப்புக்கு தலைமைப் பொறுப்பு. அது என்னடாவென்றால் அனந்துவை 'ஆக்டோபஸ்' போல அப்படியே கவ்விக் கொண்டுவிட்டது.

திருமணத்துக்கு பிறகு ஒரு பத்து நாள்கூட இந்தியாவில்

அவனை விட்டு வைக்கவில்லை. திருமணமான பதினோறாம் நாள் தென் ஆப்பிரிக்கா நோக்கி சென்றவன் தான். இன்றுதான் திரும்புகிறான்.

டெலிபோன் இருந்ததால் ஓரளவு பேசி ஆறுதல் பட்டுக்கொள்ள ரம்யாவால் முடிந்தது.

அவளும் இங்கே ஒரு டாக்டர்.

தனியார் நிறுவனம் ஒன்றில், ''இத்தனை ஆண்டு கட்டாயம் சேவை செய்கிறேன்'' என்று ஒப்புக்கொண்டு விட்டவள். அது அவளை தென் ஆப்பிரிக்கா போக விடாமல் தடுத்துவிட்டது.

அங்கே ஒருவர் பிடித்துக் கொள்ள இங்கே ஒரு விஷயம் கட்டிப்போட இரண்டு பேரும் அனுபவித்த பிரிவுத் துயரத்துக்கு ஒரு அளவேயில்லை.

அதனால் ரம்யாவின் மனது துள்ளிக் கொண்டும் முண்டிக் கொண்டும் நின்றது. ஒவ்வொருவராகத்தானே விமானப் படிகளில் வர முடியும்?

யார் யாரோ வந்தார்கள். அவள் பார்வை அவர்களை எல்லாம் 'ச்சே... ஹிம்... நோ, இவரில்லை' என்று மாமிசங்களில் தென்படும் வேண்டாத பாகங்களை ஒதுக்குவது போல ஒதுக்கித் தள்ளிவிட்டு அனந்த கிருஷ்ணனுக்காக தவமிருந்தது.

இறுதியாக, மிகமிக இறுதியாக கைகளை உயர்த்தி ஆட்டியபடி அவனும் வெளிப்பட்டான்.

அந்த நாளைய தேன்நிலவு படத்து ஜெமினி கணேசனைப் போல சுருட்டை முடி, பிரகாசமான முகம் என்று தெரிந்தான். ரம்யா அவன் தென்பட்ட நொடி பலூன் போல ஒரு எகிறு எகிறினாள்.

'அனா..!' என்று அவனது ரத்ன சுருக்கமான பெயரைச் சொல்லி அழைத்தாள்.

எப்பொழுதும் பதிலுக்கு அவன். 'ரம்' என்பான். ஆனால் ஏர்போர்ட்டில் அப்படிக் கூப்பிட்டால் அது ஒரு மதுபான பெயராக புரிந்து கொள்ளப்படும் என்பதால் அடக்கிக் கொண்டான்.

பிறகு அவளை சமீபித்துக் கட்டிக் கொண்டான். கட்டிக் கொள்ளும்போதே கொஞ்சம் அத்து மீறினான். புட்டத்தை அழுத்திப் பிடித்தான். அந்த நொடி அவனது மூன்று வருட வறுமையும், அவனது இளமைக்கான பசியும் அவளுக்கு புரிந்து போயிற்று. அதுமட்டுமல்ல. அவன் இடையில் பசிக்கிறதே என்று எந்த ஹோட்டலுக்குள்ளும் நுழையாமல் பவித்ரமாகவே இருந்திருக்கிறான் என்பதும் விளங்கிப் போயிற்று. இதுதான் ஒரு நொடியில் புரிய வைக்கும் பரிபாஷை என்பது.

ஆனால் அவளோ கண்கலங்கிவிட்டாள். அது ஆனந்தக் கண்ணீர் போலவும் தெரிந்தது. அதில் வேறு ஏதோ சோகம் இருக்கிற மாதிரியும் தோன்றியது.

''ரம்யா... இது என்ன ஆனந்தக் கண்ணீரா.. இல்ல...''

அவன் கேள்விக்கொக்கியை மாட்டவும், ஒருமாதிரி

சமாளித்துச் சிரித்தாள். மார்பு தழையத் தழைய நிறைய பெருமூச்சுகளையும் விட்டாள்.

அப்படியே ''இப்பவாவது வர வழி தெரிஞ்சுதே.'' என்றாள்.

''இப்பகூட வர வழியில்லை. நான்தான் திருட்டுத்தனமா சுவர் எட்டிக்குதிச்சி தப்பி ஓடி வர்றவன் மாதிரி வந்துருக்கேன்'' அவளுக்கு அதைக் கேட்கவும் சுருக்கென்று ஆனது.

''என்ன ரம்யா... திரும்பி வேகமா போயிடுவேன்னு நினைச்சு இப்பவே கவலைப்பட ஆரம்பிச்சுட்டியா?''

''இல்லையா பின்னே... முழுசா மூணு மாச லீவுன்னு சொன்னீங்களே.''

''சொன்னேன்... முதல்ல லீவு தரேன்னு தான் டைரக்டரேட்ல சொன்னாங்க. அதுக்குள்ளே அங்க ஜாவேதி யாங்கற ஊர்ல காலராவோட ஆக்ரமிப்பு ஆரம்பிச்சிடிச்சு. கிட்டதட்ட நூறு பேர் ஒரே நாள்ல ஹாஸ்பிடல் ஸ்பெஷல் கேர் எடுக்கச் சொல்லி கவர்மென்ட் ஆர்டர். எங்க டைரக்டரேட்டும் என்னை கூப்பிட்டு, ''யுவர் லீவ் ஈஸ் கேன்சல்ட், போய் வேலையைப் பாரு. காலராவை ஒழிக்கிற வழியைப் பாருன்னுட்டாங்க. நான் என்ன பண்ணுவேன்?''

நீண்ட பதிலும், கன்வேயர் பெல்ட் மூலம் வந்த லக்கேஜ்களை எடுத்து வைத்துக் கொள்வதுமாக இருந்தான் அனந்தகிருஷ்ணன்.

ரம்யா கண்ணை விட்டு உதிரக் காத்திருக்கும்

கண்ணீரோடு அவனை வெறித்தாள். அவனும் அதை கவனித்தான்.

''லுக் டியர்... இப்ப எதையும் கேக்காதே. பதினைஞ்சு நாளைக்கு நான் டாக்டர்ஸ்ங்கறதையே மறந்து உன்னோட இருக்கத்தான் வந்துருக்கேன்.''

''போய்யா... நீயும் உன் பதினைஞ்சு நாளும்!'' ரம்யா மார்பில் கைகளால் குத்தினாள். கொஞ்சலாக சிணுங்கினாள்.

***கா***ரில் போகும்போது சென்னை, அனந்தகிருஷ்ணன் கண்களுக்கு ஒரு புதிய ஊராக தெரிந்தது. வெளிநாடு போய்விட்டு வந்தாலே இப்படித்தான் எல்லோருக்கும் தெரியும். கோவில் மாடுகளின் குறுக்கீடும், சென்ஸ் இல்லாத டிராஃபிக்கையும் பார்த்து மிகவும் கோபப்பட்டான். கவனித்துக் கொண்டே வந்தாள் அவள். அப்படியே அவன் தோள் மேல் சாய்ந்து கொண்டாள்.

''என்ன வாழ்க்கைங்க இது.'' என்றாள்.

குரலில் கடலளவு அலுப்பு.

''பணம் வேணும், அந்தஸ்த்து வேணும்னா... இப்படி எல்லாம் விலை கொடுக்கத்தான் வேணும்.''

அவனிடமிருந்து வேகமான பதில். அவள் உடனே அதைக்கேட்டு சற்று விலகி பின் ஒரு குத்துப் பார்வை பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''பாக்காம... அது என்ன பதில்.''

''எது..?''

''பணம் வேணும், அந்தஸ்து வேணும்னா விலை கொடுக்கத்தான் வேணுங்கறது.''

''அதுதானேம்மா உண்மை?''

''நான் ஒண்ணும் உங்களை பணத்துக்காக கல்யாணம் பண்ணிக்கல.''

அவன் அந்த பதிலைக் கேட்டு உடனே ஒரு சிரிப்பு சிரித்தான்.

''என்ன... நம்ப முடியலியா... சிரிக்கறீங்களே?''

''சிரிக்காம. நீ சொல்றத என்னை நம்பச் சொல்றியா?

''சத்யமாங்க.''

''அப்ப வேலையை விட்டுடட்டுமா? இங்கையே உன்கூட வர்ற காசு வரட்டும்னு ஒரு டிஸ்பென்சரி போட்டுடுவோமா?''

''அதுகூட வேண்டாம். ஒரு ஆறு மாசம். இல்ல ஒரு வருஷம் நாம யாரைப்பத்தியும் கவலைப்படாம, எதைப் பத்தியும் கவலைப் படாம ஊட்டி கொடைக்கானல்னு போய் வாழற வழியை பார்ப்போம்.''

திரும்பவும் அனந்தகிருஷ்ணன் சிரித்தான்.

''இப்படி எடுத்ததுக்கெல்லாம் சிரிச்சா எனன அர்த்தம்?''

''உணர்ச்சி வேகத்துல நீ உளற ஆரம்பிச்சுட்டேன்னு

அர்த்தம்.''

அவள் உடனே அவன் பதிலால் அறையப்பட்டது போல ஆகி முகத்தை திருப்பிக் கொண்டாள். சில பல வினாடிகளுக்கு பேச்சே இல்லை.

அவனுக்குப் புரிந்தது.

''ரம்.'' அவளைக் கூப்பிட்டான்.

அவளிடம் தொடர்ந்து பதிலில்லை.

''கோவிச்சுக்காதே. ஐ ஹேவ் வெரிவெரி ஹார்ட் டைம். ஜஸ்ட் த்ரிசிக்ஸ்டி அவர்ஸ். அதுல ஆல்ரெடி ஒரு முப்பத்தி மூணு மணி நேரம் ட்ராவல்ல போயிடிச்சு. மிச்சத்தை நீ உன் கோபத்தால வீணடிச்சுடாதே.''

''போய்யா... நீயெல்லாம் ஒரு புருஷன்.'' அவள் பதில் கோபத்தை ஒரு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு அழகாக வெளிக்காட்ட அவனும் சிரித்தான்.

''இதை உங்க அப்பாகிட்ட போய் சொல்லு. நம்ம கல்யாணத்துக்கு முந்தியே, நான் என் நிலைப்பாட்டை அவர்கிட்ட தெளிவா சொல்லிட்டேன். அவர்தான் எனக்கு ஃபாரின் மாப்ளை தான் வேணும். பிரிஞ்சு இருக்கற மாதிரி ஒரு சூழ்நிலை இருந்தா அது நல்லதுதான். அதனால ஆசையும் பாசமும் அதிகம் ஆகும். அப்படி இப்படின்னு ஏதேதோ சொன்னார்.''

அவனது பதில் அவளை மேலும் கோபப்படுத்தியது.

"இந்த அப்பா புடலங்கா சொன்னார். தாத்தா கத்தரிக்கா சொன்னார்னுல்லாம் என்கிட்ட பேசாதே அனந்தகிருஷ்ணா. இப்ப இந்த பொண்டாட்டி சொல்றேன். ஒண்ணு என்கூட இரு. இல்ல அங்கேயே உன்கூட கூட்டிகிட்டு போ. எப்பப் பார் உன்போட்டோவை பார்த்து அழுவற கண்றாவியெல்லாம் இனி என்கிட்ட நடக்காது.எங்கப்பன் ஒரு அறிவு கெட்டவன். அவனுக்கு தன் பொண்ணுங்க யாரும் கல்யாணத்துக்கு பிறகு எதையும் கேட்டு வந்துடக்கூடாதுங்கற எண்ணம். அதான் என் அக்காவை அமெரிக்காவுக்கு பிடிச்சு தள்ளினான். என்னை ஆப்பிரிக்காக்காரன் உன்கிட்ட தள்ளிட்டான்."

ஒரு சேரிப் பெண் போல ரம்யா பேசியது வண்டியைச் செலுத்தியபடி இருந்த டிரைவரைக் கூட சற்று திரும்பிப் பார்க்க வைத்தது.

அனந்தகிருஷ்ணனுக்கு அதற்குமேல் பொறுமை இல்லை. அவளது வாயை அடைக்க ஒரே ஒரு வழிதான் தெரிந்தது. நல்லவேளை காரின் முன் சீட்டுக்கும், பின் சீட்டுக்கும் நடுவில் ஒரு மினி கர்ட்டன் இருந்தது. அதை சட்டென்று இழுத்து விட்டான். அப்படியே அவளது வாயைத் தேடி தன் இதழ்களைக் கொண்டு சென்றான்.

அவளும் கப்சிப்.

# 2

*ஒரு மனிதன் இறைத்தன்மை அடைந்து மற்றவர்கள் முன் அவன் கடவுளாக திகழ்வது என்பது அபூர்வமான ஒரு செயலாகும்.*

*இன்றைக்கு கடவுள் தன்மை பற்றி ஒரு திட்டவட்டமான சிந்தனையே யாருக்கும் இல்லை. எல்லாவிதமான ஆற்றலையும் பெற்ற ஈரேழு பதினான்கு உலகத்துக்கும் ஏகபோக சக்கரவர்த்தியாக திகழ்பவன்தான் கடவுள் என்பது இன்று பலரது எண்ணம்.*

*‘கடவுள்’ என்பவன் வெல்ல முடியாதவன். அவன் நினைத்தால் பாலைவனத்திலும் ஒரு கடல் உருவாகும். நமக்கு முதுகுக்கு பின்னாலும் இரு கண்கள் முளைக்கக் கூடும். இப்படித்தான் அவனது சக்தி மதிப்பிடப்படுகிறது.*

*இது கடவுள் நம்பிக்கை உள்ளவர்களின் கற்பனை. கடவுள் நம்பிகை அற்றவர்களோ, மனித சக்திதான் உலகில் ஒரே உயர்வான சக்தி என்கின்றனர்.*

*அந்த சக்தியால் விஞ்ஞானபூர்வமாக ஏன், எதற்கு எப்படி என்று கேள்வி கேட்டு, இயற்கை விதிகளுக்கு உட்பட்டுத்தான் இயங்க முடியும் என்பது அவர்கள் கருத்து. ஆகையால் அவர்கள் அஷ்டமாசித்து என்கிற எட்டு வகை ஆற்றலையே ஒரு அற்புதக் கற்பனையாக மட்டுமே பார்க்கின்றனர்.*

*மாறாக எண் பேராற்றலை நம்பி இறை சக்தி பற்றி அறிய முயல்பவர்களோ அதை ஒரு மாபெரும் மாயா*

***சக்தியாகவே நினைக்கின்றனர். உண்மையில் எண்பேராற்றல் என்பது மாய சக்தியே அல்ல. அது ஒரு விஞ்ஞானமே. விளங்கினால் விஞ்ஞானம் அன்றேல் மெய் ஞானம் என்பதே நிதர்சனமான உண்மை. யாருக்கெல்லாம் எண் பேராற்றல் விளங்குகிறதோ அவர்கள் வரையில் அது ஒரு விஞ்ஞானக் கலைதான்.***

***அதனாலேயே எண் பேராற்றலைப் பெற்றுத் தங்களையும் இறைவனுக்கு இணையாக ஆக்கிக் கொண்ட பலர் அது பற்றியெல்லாம் பெரிதாக பேசுவதே இல்லை. சாதாரண மனிதனாகப் பிறந்து ஏதோ ஒரு வகையில் எண் பேராற்றலை அடையப் பெற்று அதன் காரணமாக மனிதக் கூட்டம் முன் கடவுளாய் தெரிந்தவர்கள் பலர் உண்டு.***

***அவர்களில் ஒருவர் தான் ஷீரடி சாய்பாபா!***

***ப***ங்களா முகப்பிலேயே எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள். டிரைவரும் ஹாரன் சப்தம் கொடுத்தபடி காரை உள்ளே செலுத்தினான்.

போர்டிகோ முகப்பில் ரம்யாவின் அப்பா, அம்மா, பாட்டி என்று ஒரே கூட்டம்.

கார் வந்து கிரீச்சிட்டு நிற்கவும் எல்லோரிடமும் பரபரப்பும், படபடப்பும் தொற்றிக் கொண்டது.

ரம்யாவின் அம்மா, ''ஸ்ரீராமா... ஜெய வீரா...'' என்று முனங்கும் குரலில் பாட்டுப் பாடி ஆரத்தி எல்லாம் சுழற்றினாள்.

''வெல்கம்மாப்ளை.. வெல்கம்...'' என்று ரம்யாவின்

அப்பா ராகவன் மார்போடு அணைத்து வரவேற்பு கொடுத்தார்.

''நீங்க ஏன் மாமா ஏர்போர்ட்டுக்கு வரலை.?'' அனந்தகிருஷ்ணனும் அடக்க மாட்டாமல் கேட்டான்.

அவர் உடனே வேட்டியை விலக்கி காலைக் காட்டினார். ஒரு பெரிய மாவுக்கட்டு. அவனுக்கும் பகீரென்றது.

''என்ன ஆச்சு?'' பதறினான்.

அவரும் நடந்தபடியே சொன்னார். நடையில் கொஞ்சம் நொண்டல்.

''நேரம் சரியில்ல மாப்ள... ஒரு மோட்டார் பைக்காரன் குடிச்சுட்டு வந்து கால்மேல ஏத்திபிட்டான். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தா பளிச்சுன்னு எலும்பு முறிவு தெரிஞ்சது. அப்புறம் என்ன? கட்டுப் போட்டுட்டார் டாக்டர்.'' என்றார்.

அவர் முடிக்கும் முன் ''லொக்லொக்'' என்று இடைவிடாமல், இருமி தனக்கும் உடல்நலமில்லை என்று சொல்லாமல் சொன்னாள் ரம்யாவின் அம்மாவான லக்ஷ்மி''

''மாமி உங்களுக்கென்ன உடம்புக்கு?''

''ஒரே இருமல்... போறாததுக்கு ஆஸ்த்மா வேற''

அனந்தகிருஷ்ணன் பார்வை உடனே ரம்யா பக்கம் தான் திரும்பியது. அந்த பார்வைக்கு அர்த்தமும் அவளுக்கு விளங்கியது. ஒரு டாக்டர் இருக்கும் வீட்டில் இப்படி இத்தனை நோயாளிகளா? என்பது தான் அந்த பார்வைக்கு பொருள். அவளும் பதில் கூற ஆரம்பித்தாள்.

''நான் ட்ரீட்மெண்ட் கொடுக்கறதால தான் இவங்க உங்ககூட பேசிக்கிட்டாவது இருக்காங்க. இல்லாட்டா ஆஸ்பத்திரியில படுத்தபடுக்கைலதான் இவங்க இருக்கணும். நீங்களும் அங்கபோய்தான் இவங்களைப் பார்க்க வேண்டியிருக்கும்.''

அவளது பதில் ஒரு சரியான பதிலாய் அவனுக்குத் தோன்றவில்லை.

''நோ... நோ ரம்யா... நீ... இவங்களை சீரியஸா எடுத்துக்கலைன்னு நினைக்கறேன்'' என்றான் கோபமாக.

''மாப்ள... என்ன இது? வந்ததும் வராததுமா அவகூட சண்டை போட்டுகிட்டு. ரொம்ப நாள் கழிச்சு வந்துருக்கீங்க. இப்ப உங்களைப் பார்க்கும்போது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?'' என்று பேச்சை மாற்ற ஆரம்பித்தார் ரம்யாவின் அப்பா ராகவன்.

அவனுக்கும் அவர் சொல்வது புரிந்தது. ஏனோ ரம்யா அவனையே வெறித்து கொண்டிருந்தாள். அவள் நினைப்பெல்லாம் அவன் எங்கே ராமாபுரத்துக்கு கிளம்பி விடுவானோ என்கிற புதிய கவலையிலும் புகுந்து கொண்டிருந்தது.

*ரா*மாபுரம்தான் அவன் பிறந்த ஊர். உளுந்தூர் பேட்டைக்கு பக்கத்தில் இருக்கிறது. சரியான பட்டிக்காடு. அனந்த கிருஷ்ணனின் அப்பாவும் அம்மாவும் அங்கேதான் இருக்கிறார்கள். அண்ணன் விஸ்வநாதனின் குடும்பமும்

அங்கேதான் இருக்கிறது. விவசாயம் தான் குடும்பத் தொழில். ஆனால். ஒரு நாலைந்து வருஷமாகவே மழை பொய்த்துப் போய்விட்டதால் சிங்கி அடித்து கொண்டிருக் கிறார்கள்.

பழைய சேமிப்பில் காலம் கடத்திக் கொண்டிருக் கிறார்கள். இதில் அனந்த கிருஷ்ணன் மன்னி ஜானகிக்கு பிளட் கான்சர் வேறு. அறுபது நாளோ, தொண்ணூறு நாளோ தான், அவளுக்கு ஆயுள் என்று டாக்டர் நாள் குறித்து கொடுத்துவிட்டதாக கேள்வி. இனி யாரால் என்ன செய்ய முடியும்? ரம்யாவுக்கு ஜானகி என்றால் கொஞ்சம் இஷ்டம்தான். கல்யாணமாகி வந்த புதிதில் அவள் மனசறிந்து நிறைய ஒத்தாசை செய்தாள்.

நல்ல மஞ்சள் முகம், அதில் வைர மூக்குத்தியும் தோடும் கண்ணைப் பறிக்கும். அப்படி ஒரு தேஜஸ். இப்பொழுது எலும்பும், தோலுமாக இருப்பதாக கேள்விப்பட்டாள். போய் பார்த்துவிட்டு வரவேண்டும் என்றால் அதற்கு வேளை வரவில்லை. சரி எப்படியும் அனந்தகிருஷ்ணன் வந்தால் சொந்த ஊருக்கு போகாமல் இருக்க மாட்டான். எனவே, அவனோடு தொற்றிக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டாள்.

அனந்தகிருஷ்ணன் வந்த களைப்பு நீங்க குளித்துவிட்டு வரவும், ஒரு பூத்துவாலையுடன் அவனை சமீபித்து வாஞ்சையாக தலை துவட்டிவிடத் தொடங்கினாள்.

கணவன், மனைவி உறவில் அன்பு அதிவேகமாக கடத்தப்படும் கட்டங்கள் பல உண்டு. அதில் இப்படி தலை

துவட்டுவதும் ஒன்று. அந்த நொடிப் பொழுதுகளும் பரவச மானவை. அதிலும் வருடக்கணக்கில் பிரிந்து இருந்துவிட்டு வந்திருப்பவனிடம் அது எந்த அளவு வெளிப்படும் என்று சொல்லத் தேவையே இல்லை. அவள் தலை துவட்டும்போது இழுத்துக் கட்டிக் கொண்டான்.

இரண்டாவது தடவையாக முத்தம் உற்பத்தி செய்யத் தொடங்கினான். அவளும் தடை ஏதும் கூறவில்லை.

ஆனாலும் சட்டென்று யாரோ பார்த்து விட்டதுபோல விலகினான். அவளுக்கு திகைப்பாக இருந்தது.

''என்னப்பா..?''

''ஒண்ணுமில்ல ரம்யா, எல்லார் ஞாபகமும் ஒரு நொடி வந்துடுச்சி.''

''அதனால.?''

''உன்னைச்சுத்தி ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதத்துல கஷ்டப்படும்போது உனக்கு முத்தம் ஒரு கேடானு மனசாட்சி கேட்கிற மாதிரி ஒரு பிரமை.''

''உங்க மனசாட்சி ஒரு கோணங்கி.''

''என்ன சொல்றே ரம்யா, நான் தப்பா என்ன சொல்லிட்டேன்?''

''இதோ பாருங்கோ, நான் உங்க மனைவி. எனக்கும் ஒரு குறை இருக்கு. ஞாபகம் இருக்கட்டும்.''

''நான் மறுக்கலையே.''

''அப்ப என்னைத் தொடும்போது எப்படி உங்க மனசாட்சி அப்படி நினைக்கலாம்.''

''எப்படி நினைக்கலாம்னா, இது என்ன கேள்வி?''

''இல்ல... நீங்க சமாளிக்கிறீங்க... உங்களுக்கு என்மேல அன்போ, அக்கறையோ இல்ல. இப்பகூட நீங்க இந்தியா வந்துருக்கறது இந்த ரம்யாவுக்காக இல்லை.''

அவள் மிகக்கூர்மையாக எங்கோ செல்லத் தொடங்கினாள்.

''என்ன உளர்றே.?''

''உளறலை.... உண்மையைச் சொல்றேன். உங்களுக்கு உங்க மன்னி ஜானகியைப் பார்க்கணும்.''

அவள் ஜானகியை ஞாபகப்படுத்தவும் அவன் உடனே மௌனமானான்.

''உங்க மௌனமே நான் சொல்றதுதான் சரிங்கறது.''

''சரி ரம்யா. அதுல என்ன தப்பு இருக்கு. அவ எப்ப போய்ச் சேருவான்னு தெரியாது. போறதுக்குள்ற பார்க்க நினைக்கறது தப்பா.''

''நானும் ஈவு இரக்கம் உள்ளவதான். அதை தப்புன்னு சொல்வேனா?''

''அப்புறம் ஏன் அதை ஒரு குற்றம் மாதிரி நினைச்சு கேள்வி கேட்கறே.?''

''அவனது கேள்வி இந்த முறை அவளை மௌனத்தில்

போட்டு புதைத்தது. விழியோரம் நீர் மணிகள் ஓடிவந்து குடுகுடுவென கன்னக்கதுப்பை ஒரு மைதானமாக நினைத்துக் கொண்டு உருண்டு ஓடத் தொடங்கின.''

''பைத்தியம் இப்ப எதுக்கு அழறே?''

''என் பொசசிவ்நெஸ்ஸை நினைச்சேன். அழுகை வந்துடுத்து.''

''புரியறது... நம்ம பிரிவு உன்னை எப்படி எப்படி யெல்லாமோ யோசிக்க வைக்கறது. நானும் புலி வால் பிடிச்ச நாயர் கணக்கா இருக்கேன்.''

அவள் உடனே கண்ணீரை துடைத்துக் கொண்டு அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''அது யார் அந்த புலிவால் பிடிச்ச நாயர்?''

''நீ கேள்விப்பட்டதில்லையா?''

''ஊஹூம்!''

''புலி ஒண்ணு படுத்து தூங்கிண்டு இருந்ததாம். அப்ப அந்த பக்கமா ஒரு நாயர் வந்தாராம்.''

''உம்...''

''அப்படியே உன் கையால என் தலையை வாரி விடேன். ஒரு வேலையும் முடியும். நானும் விஷயத்தை சொல்லி முடிப்பேன்.''

''ஆசையைப் பாரு... சரி சொல்லுங்கோ.''

அவள் சீப்பை கையில் எடுத்தபடியே தலையை வாரத்

தொடங்கினாள். அவனும் ஆரம்பித்தான்.

''அந்த நாயர் புலியை முதல்ல பார்க்கல. அதோட வாலைத்தான் பார்த்தாராம். நல்லா வழவழன்னு மஞ்சள் கலர்லையும், கறுப்பு வட்டக் கோடோடையும் அது இருந்தது. ஆஹா எவ்வளவு அழகா இருக்கு இதுன்னு நினைச்சிண்டே அதை தொட்டாராம்.''

''ஐய்யய்யோ...''

''கரெக்ட்! நீ பயந்தா மாதிரிதான் அடுத்து நடக்க ஆரம்பிச்சது. வாலை அவர் அழகா தொட்டுப்பார்த்து அது கயிறா, இல்லை கம்பான்னு தெரிஞ்சுக்க, அதை ஒடிச்சப்போ புலி கண் முழிச்சு எழுந்துடுத்து. அப்புறம் தான் நாயருக்கு தான் பிடிச்சிருக்கறது ஒரு புலியோட வால்ங்கறதே தெரிஞ்சது. புலி அவர் மேல பாயப் பார்த்தது. அவரோ வாலை கெட்டியா பிடிச்சபடியே விடாம அதை அப்படியே இழுத்துப் பிடிச்சு சுத்த ஆரம்பிச்சார்.''

''அப்புறம்.''

''சுத்திண்டே இருக்க வேண்டியதுதான். சுத்தறதை நிறுத்தி பிடியை விட்டா புலி அடிச்சிடும். சுத்திண்டேவும் இருக்க முடியாது. என்ன பண்றது?''

''ஐயோ... பயங்கர கிரிட்டிகல் பொசிஷன் இல்ல?''

''இன்னிக்கு நீ, நான்னு எல்லோரும் அப்படித்தான் இருக்கோம்.''

''எப்படி?''

''நான் இப்ப ஒரு ஆப்பிரிக்க டாக்டர். அக்ரிமெண்ட்ங்கற புலியோட வாலைப் பிடிச்சுட்டேன். விட முடியாது. விட்டா அந்த புலி இத்தனை நாள் சம்பாதிச்ச அவ்வளவையும் திருப்பிக் கொடுத்துட்டு போன்னு சொல்லும். நீ அனந்த கிருஷ்ணங்கற இந்த புலியோட, சாரி.. புருஷனோட வாலைப் பிடிச்சுட்டே. உன்னாலையும் என்னை விடவும் முடியல. தொடவும் முடியல.''

அவள் அதற்கு மேல் அவனைப் பேசவிடவில்லை. இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். பொங்கிப் பொங்கி அழத் தொடங்கிவிட்டாள்.

# 3

***ஒ**ருமுறை பகவான் ரமணரை ஒருவர் சந்தித்து ஸ்வாமி நான் கடவுளைக் காண விரும்புகிறேன். நீங்கள் பெரிய யோகி. எனவே உங்களால் கடவுளைக் காட்ட முடியும், தயவு செய்து அவரை என் கண்களுக்கு காட்டுவீர்களா என்று கேட்டார். ரமணருக்கு ஒரே சிரிப்பு. அவருக்கு அவரை புரிய வைக்க, அவரது ஆசையையும் விளங்க வைக்க, நீ யார்.? உன் பெயர் என்ன? அந்த பெயர்தான் நீயா? இல்லை நீ வேறா? என்றெல்லாம் கேள்விகளை அடுக்கியபடி செல்ல, இறுதியாக அவருக்கு விளங்கியது. நாம் நம்மைப் பற்றியே தெளிவில்லாத நிலையில் இருக்கிறோம். இந்த நிலையில் எப்படி கடவுளை உணர போகிறோம் என்று!*

*அப்படியானால் நீங்கள் கேட்ட கேள்விக்கெல்லாம் ஒரே விடையோடு நான் வரும்போது எனக்கு கடவுளை காட்டுவீர்களா? என்று கேட்டார். அந்த கேள்விக்கான விடை தெரிய வரும்போதே, கடவுளும் தெரியவந்து விடுவார். நான் எதற்கு என்றாராம் ரமணர்.*

*கடவுளை அறியும் முயற்சிகள் இன்று இப்படித்தான் உள்ளன. உண்மையில் கடவுள் என்பவர் நாம் காலண்டர்களில் காணும் வடிவில் தங்க கிரீடம் சகிதம் ஏகபோக சக்ரவர்த்தியாகத்தான் இருக்கிறாரா? அவரைக் கூட விட்டு விடுங்கள். பூமியில் பலர் கடவுளாக கருதப் படுகிறார்களே. எதை வைத்து? கேள்வி எழுகிறது.*

*சிலர் அனுபவங்கள் அதற்கான பதிலை அளிக்கின்றன. ஒருவருக்கு புற்றுநோய் முற்றி விட்டது. டாக்டர்கள் கைவிட்டுவிட்டனர். ஆனால் அவர் ஒரு யோகியை சந்தித்தபோது அந்த யோகி அவரைக் கட்டித் தழுவிய ஒரு செயலிலேயே அவர் நோய் முற்றிலும் குணமாகி விடுகிறது. மருத்துவ உலகம் இன்றளவும் அதை 'இட்ஸ் ஏ மிராகிள்' என்று கூறுகிறது. எப்படி?*

**வி**ழுப்புரம் உளுந்தூர்பேட்டை சாலை!

பூசின மாதிரி கன்னங்கரேல் என்று இருந்தது. இருபக்கமும் பரட்டைத் தலையோடு தடிதடியாய் புளிய மரங்கள். மரத்தடியில் சில ஆடுகள் மேய்ந்து கொண் டிருந்தன. சில சிறுவர்கள் தொரட்டிக்குச்சியும் கையுமாய் அரை டிராயர் மட்டும் அணிந்தவர்களாய் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

அங்கங்கே மரக்கிளைகளில் அலுமினியத் தூக்கு

வாளிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அதில் கம்பங்கூழோ, அரிசிக்கஞ்சியோ, இல்லை பழைய சோறோதான் இருக்கும். அக்மார்க் கிராமத்துக் காட்சிகள். ரசித்தபடியே காரை டிரைவ் செய்து கொண்டிருந்தான் அனந்தகிருஷ்ணன். அருகில் இணை பிரியாதவளாக ரம்யா. இருவர் பார்வையும் சுற்றுச்சூழலை ரசித்தபடியே வந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை செம்மண் காடு. உழவர்கள் உழுது போட்டிருந்தார்கள். ஆனால் பச்சையைத்தான் பார்க்க முடியவில்லை.

''ஆமா இது என்ன மாசம்? அனந்தாவின் கேள்வியை தொடர்ந்து, ''இப்ப என்ன மாசத்த பத்தின கவலை.'' என்றாள் ரம்யா.

''இல்ல... மே, ஜூன் மாசம் மாதிரி இப்படி காய்ஞ்சு கிடக்கேன்னு கேட்டேன்.''

''அங்க உங்க தென்ஆப்பிரிக்காவுல விளைஞ்சு தள்றதாக்கும்.''

''அஃப்கோர்ஸ்... இந்த அளவு வறட்சியை நான் அங்க எங்கேயுமே பார்த்ததில்ல ரம்யா, ஏன் இப்படி இருக்கு? இது நம் ஊர்தானா?''

''மழை பெஞ்சு மூணு வருஷமானா வேற எப்படி இருக்கும்?''

''மை காட். அப்ப மழையே இல்லையா?''

''பெய்யும்.. ஆனா பெருசா பெய்யாது. சும்மா கொஞ்ச நேரம் தூறிவிட்டு அடங்கிடும். இருக்கற சூட்டை எல்லாம் நன்னா, கிளப்பி விட்டுடும். ஏண்டா இந்த மழையே

பெஞ்சதுன்னு இருக்கும்.''

''தென், குழாய்லல்லாம் ஒழுங்கா தண்ணி வரதா?''

''இது குழாய்ல தண்ணி வர்ற காலமில்ல மைடியர் மணாளா. லாரில தண்ணி வர்ற காலம்!''

''வாட்..?''

''வாட்டாவது பூட்டாவது. உங்க சௌத் ஆப்பிரிக்காவுல இந்தியா பத்தி, பர்ட்டிகுலரா தமிழ்நாடு பத்தியெல்லாம் பேப்பர் வராதா. இல்லை நீங்க தான் டி.வி. நியூஸ்லாம் பாக்கறதில்லையா?''

''என்ன ரம்யா. தினம் எங்க மழை பெஞ்சுதுன்னு, எங்க வெய்யில் அடிக்கறதுன்னா பார்த்துண்டு இருக்க முடியும். நான் டாக்டர்மா.. கறுப்பு கறுப்பா கருணைக் கிழங்குல மூஞ்சிய செஞ்ச மாதிரி என்னைப் பார்க்க வர்ற நோயாளி களுக்கு ஊசி மருந்து கொடுக்கறதுதான்மா என் வேலை.''

ரசனையோடு அவன் சொன்னதை ரசித்தவள், முதல் முறையாக கொஞ்சம் சிரித்தாள்.

''அப்படியே நீங்க வந்து இருபத்தி நாலு மணி நேரம் முடியப் போறது. இன்னும் இருநூத்தித் தொண்ணூத்தி ஆறு மணி நேரம்தான் இருக்கு. அப்புறம் நீங்க திரும்பி போயிடுவீங்கோ.'' என்றாள் பிரிவுத் துயர் நெளியும் சோகமான குரலில்.

அவன் ஸ்டியரிங்கில் இருந்து கையை எடுத்து செல்லமாக அவள் கன்னத்தைத் தடவி, பின் தன்

உதட்டருகே கொண்டு சென்று 'ப்ச்ச்' என்றான்.

காரும் ராமாபுரம் என்கிற பெயர்ப் பலகையை சாலையோரமாக பார்த்துவிட்டு ஒரு புழுதி படிந்த மண் சாலையைப் பார்த்து திரும்பியது. குண்டுபோட்ட இடம்போல புழுதிக்கவளம் கிளம்பி காரையே மூடப் பார்த்தது.

''மெல்லப் போங்கோப்பா. கண்ணே தெரியலை'' என்றாள் ரம்யா. அனந்த கிருஷ்ணனும் நிதானமாக காரைச் செலுத்த ஆரம்பித்தான். ஏறத்தாழ ஒரு மைல் தூரம். சாலை முழுக்க யானையைப் போட்டு புதைக்கலாம், அப்படி ஒரு பள்ளம், மேடு!

''ரோடெல்லாம் இவ்வளவு மோசமா இருக்கே ரம்யா. பஞ்சாயத்துல என்ன பண்றா?''

''நீங்க வேற. ரோடுன்னு ஒண்ணாவது இங்க இருக்கே. அங்கங்கே ஆறே காணாம போயிண்டிருக்கு.''

''என்ன சொல்றே. ஆறுன்னு ரிவரைத் தானே சொல்றே?''

''எக்ஸாக்ட்லி.''

''அது எப்படி ரிவர்காணாம போகும்.''

''போய்ப் பாருங்கோ... ஆத்து மண்ணை எல்லாம் லாரி லாரியா வந்து அள்ளிண்டு போய், ஆறு இருந்த இடத்துல வீடு கட்டவே ஆரம்பிச்சாச்சு. காவேரின்னு ஒரு ஆறு இருந்ததே கேள்விப்பட்டிருக்கேளா?''

''என்ன ரம்யா அப்படி சொல்லிட்டே... காவேரி

வெள்ளத்துல நான் போகத் தெரிஞ்சவன் தெரியுமா உனக்கு.''

''அதெல்லாம் இனி இறந்த காலம். இப்ப காவேரிங்கறது ஒரு நீளமான மண் பாதை. மேட்டூர்ல இருந்து தஞ்சாவூர் வரணும்னா அந்த பாதைல வந்தா போதும்.''

ரம்யா சொல்வதெல்லாம். பயங்கர மிகையாகத்தான் முதலில் தோன்றியது. ஆனால், அவனது ஊரின் வறட்சியைப் பார்க்கும்போது ஒரு வேளை உண்மையாக இருக்குமோ என்று தோன்றியது.

வீடும் வந்துவிட்டது.

முன்பே போன் செய்து தகவல் தந்திருந்ததால் அக்ரஹாரமே அவரவர்கள் வீட்டு வாசலில் நின்றபடி அனந்தகிருஷ்ணனை வரவேற்க காத்திருந்தது.

ஒரு அரை டிராயரோடு சைக்கிள் டயர் ஒன்றை உருட்டிக் கொண்டு ஊரைச் சுற்றி வந்த பிள்ளை. இன்று வெளிநாட்டில் வசிக்கும் ஒரு பிரபலமான டாக்டர் அவர்களுக்கெல்லாம் பெருமிதமாக இருந்தது. அது அவர்கள் முகத்தில் தெரிந்தது.

அவனும் காரை விட்டு இறங்கினான்.

எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தான். யாரையுமே சட்டென்று அடையாளம் காண முடியவில்லை.

வெடவெடவென்று கை கால் நடுங்க கைத்தடியோடு ஒரு பாட்டி வந்தாள்.

''அனந்தா'' என்றாள் பொக்கை வாயைப் பிளந்தபடி, அவனுக்கு அது யார் என்றே விளங்கவில்லை.

''என்னடா பாக்கறே... பங்கஜா பாட்டிடா.'' என்றாள் அவள். அதன் பிறகு தான் ஞாபகம் வந்தது.

''பாட்டி நீயா..?'' என்று கட்டிக் கொண்டான்.

அவளை சட்டென்று உணர முடியாமல் போனதற்காக ஒரு பக்கம் வருத்தப்படவும் செய்தான்.

அடுத்தடுத்து வரதன், டெல்லி மாமா, அப்பு, நரசிம்மாச்சாரி, வனஜா என்று வரிசையாக எல்லோரும் அவனிடம் வந்து நலம் விசாரித்தார்கள்.

சிலரைத்தான் அடையாளம் தெரிந்தது. பலரை அடையாளம் காணமுடியாதபடி மாறியிருந்தார்கள்.

அண்ணா விஸ்வநாதனும் இறுதியாக வந்து, ''வா அனந்தா.'' என்று தோளில் கை போட்டு அணைத்தபடி வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

''எப்படிண்ணா இருக்கே.''

''இருக்கேன்.'' அந்த பதிலில் உயிரில்லை.

அந்த தெருவிலேயே மாடி வீடுள்ள ஒரே குடும்பம் அவர்கள் குடும்பம் தான். அந்த மாடியில்தான் இருந்தார்கள் அனந்தாவின் தாய் தந்தையர்.

''அப்பா அம்மா மாடில தான் இருக்கா. அவாளால மாடிப்படி ஏறி இறங்க முடியாது. எதுன்னாலும் நாமதான் போய் பாக்கணும்.'' என்றார் விஸ்வநாதன்.

''அவாளை அப்புறம் பாக்கலாம். மன்னி எங்கே?

அவன் உதடு துடித்தது. விஸ்வநாதனும் சில நொடி வெறித்துவிட்டு, ''இப்பதான் ஊர்ல இருந்து வந்துருக்கே. வந்த உடனே அவ முகத்துல விழிக்கணுமா?'' என்றார். அந்தக் கேள்வியில் ஏராளமான அளவில் பலவிதமான உட்பொருள்.

''என்னண்ணா அப்படி சொல்லிட்டே... நான் வந்துருக்கறதே மன்னிக்காகத் தாண்ணா.'' சொல்லும்போதே அவன் குரல் உடைந்து போயிற்று.

ரம்யாவும் ஆமோதிக்கிற விதமாய் அவரைப் பார்த்தாள்.

''சரி... அந்த ரூம்லதான் இருக்கா. போய் பார்த்துட்டு வாங்கோ'' என்று கையை காட்டினார் விஸ்வநாதன். ஆனால் அவர் உடன் செல்லவில்லை.

அனந்தகிருஷ்ணனும், ரம்யாவும் இறுகிய மனசோடும் இருளடைந்த முகத்தோடும் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

அறைக்குள் நல்ல இருட்டு. ஒரே ஒரு நைட் லைட் மட்டும் ஒரு மெழுகுவர்த்திச் சுடர் அளவுக்கு வெளிச்சத்தை சிதறவிட்டுக் கொண்டிருந்தது. அறையின் ஒரு மூலையில் கயிற்றுக்கட்டில். கட்டில் மேல் கறுப்பாய் ஒரு உருவம் படுத்திருப்பது லேசாய் தெரிந்தது. அவ்வப்போது அந்த உருவம் மெல்ல முணங்கிவிட்டு புரண்டு படுக்கக்கூட திராணியற்றது போல மெல்ல அசைந்தது.

நெடுநேரம் வரை கிட்டே நெருங்காமல் அதைப் பார்த்த

அனந்தகிருஷ்ணனுக்கும், ரம்யாவுக்கும் அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதற்காக எவ்வளவு நேரம் அங்கே அப்படியே கிடக்க முடியும்? எலி ஒன்று சரசரவென்று ஓடி ஒரு சின்ன சலனமூட்டியது. கப்பென்று ஒருவித அழுக்கு வாசம் வேறு.

மூக்கைச் சிணுப்பிக் கொண்டான் அனந்தகிருஷ்ணன். அவன் சிறு பிள்ளையாயிருந்த சமயம் அந்த அறையில் தான் அறுவடையாகும் கடலையை கொட்டி வைப்பார்கள். மள்ளாட்டை ரூம் என்றே அதற்கு பெயர்.

அப்பொழுதே, ஜானகி அவனுக்கு மன்னியாக வந்து விட்டாள். அனந்த கிருஷ்ணன், அவன் அப்பாவுக்கு ஒரு அதிசயம் போல வந்து பிறந்த பிள்ளை. அதாவது அவரது அறுபதாவது வயதில், அவருக்கு சாந்தி முகூர்ததம் நடத்தியபோது அதில் உருவானவன்.

இதை உலக அதிசயங்களில் ஒன்றாக சொல்லலாம். இப்பொழுது இருக்கும் அண்ணா விஸ்வநாதன் தத்துப் புத்திரனாக வந்தவர்தான். அதேசமயம் அண்ணா மன்னிக்கும் வாரிசே இல்லை. எனவே அனந்தாவையே ஜானகி தன் பிள்ளைபோல நினைக்க ஆரம்பித்துவிட்டாள். அவள் தான் அவனுக்கு சோறு ஊட்டினாள். பாலும் ஊட்டினாள். அவன் அம்மாவுக்கு வெட்கமும், வேதனையும் அவனருகே அதிகம் நெருங்கவிடாமல் செய்துவிட்டது. சுருக்கமாக சொல்வதானால் அனந்தாவுக்கு ஜானகிதான் தாய். பளிச்சென்று ஜொலித்த அன்புத்தாய். அவளா இன்று இப்படி ஒரு மூலையில்? அனந்தகிருஷ்ணனுக்கு துக்கம்

தொண்டையை அடைத்தது.

''மன்னி.'' என்றான் மெல்லிய குரலில், அவள் காதுகளுக்கு அதுபோய் சேரவில்லை.

''மன்னி...'' சற்று உரக்கக் குரலெடுத்தான்.

''யாரது?'' அவளிடமும் பதில் கேள்வி.

''நான்தான்... அனந்தா!''

''அனந்தா..'' அவள் அடுத்த நொடி பலத்தை எல்லாம் திரட்டியவளாக நிமிர்ந்து எழுந்து அமரத் தொடங்கினாள். இருவரும் ஓடிச் சென்று அவள் அருகில் அமர்ந்து அவளை அப்படியே தாங்கிக் கொண்டனர்.''

''எப்ப வந்தே... வந்து ரொம்ப நாழியாச்சா? ஆமா ஆரத்தி எடுத்தாளா?''

அந்த நிலையிலும் ஐதீகக் கவலை அவளிடம்.

''அட என்ன மன்னி நீ... இப்ப ஆரத்தி தான் ஒரு கேடா...'' கேட்கும்போதே அனந்தகிருஷ்ணன் குரல் உடைந்து போனது. ரம்யா எழுந்து சிரமப்பட்டு ஸ்விட்ச் போர்ட் எங்கே என்று தேடி ஸ்விட்சைப் போட்டதில் நூறு தடவை சிணுங்கிவிட்டு பிறகு போனால் போகிறது என்று எரியத் தொடங்கியது ட்யூப் லைட்!

அந்த வெளிச்சத்தில் அவள் முகத்தை பார்க்கச் சகிக்கவில்லை. தலையில் முடியெல்லாம் உரிந்து, கன்னமெல்லாம் சுருங்கி, வெய்யிலில் உலரப்போட்ட ஆப்பிளின் தோல் போல இருந்தது. ஜெகஜோதியாக ஜொலித்த அந்த

பழைய முகத்தை கற்பனை கூட செய்து பார்க்க அவனால் முடியவில்லை.

''மன்னி.. என்ன மன்னி இது? உனக்கா இப்படி ஒரு கதி?'' என்று கட்டிக் கொண்டு கதறத் தொடங்கி விட்டான்.

சப்தம் வெளியே விஸ்வநாதன் காதுகளிலும் விழுந்தது. அதேசமயம் விஸ்வநாதனைப் பார்க்க ஒருவர் வந்தார்.

''விச்சா...'' அழைத்தார்.

''யாரு?''

''நான்தான் கோபு.''

''கோபுவா... வா கோபு.''

''தம்பி வந்துருக்கான் போலருக்கு?''

''ஆ... ஆமாம்..''

''சந்தோஷம்... நான் வந்த விஷயத்தை சொல்லி முடிச்சுடறேன். சந்தரானந்த ஸ்வாமிகள் பக்கத்துல பாதுர்க்கு வந்தாச்சு. நாளைக்கு நம்ம ஊருக்கு வரதுக்கும் சம்மதிச் சுட்டாராம். பாதுர் வரதன் மாமா தகவல் சொல்லிவிடச் சொன்னார்.''

''அதுக்கு நாம என்ன பண்ணனும்?''

''என்ன விச்சா கேள்வி இது? அவர் வந்துட்டுபோனா மழை பெய்து, எல்லாரும் சுபிட்சமாக இருப்பார்ங்கறது நம்பிக்கை...நம்ம ஊர் காச்சப்பாடுதான் உனக்கே தெரியுமே.''

''சரி என்ன பண்ணனும்னு நம்ம பிரசிடெண்ட்

பிச்சமூர்த்திகிட்ட கேட்டுட்டு சொல்.''

''அவர்கிட்டல்லாம் பேசியாச்சு. ஒண்ணுமில்ல! அவர் வரும்போது பூர்ண கும்ப வரவேற்பு கொடுத்தா போதும். அவர் நடந்துதான் வருவாராம். வழியில் எல்லாரும் ஆரத்தி எடுத்தா நன்னாருக்கும். அவர் எவ்வளவுக்கெவ்வளவு சந்தோஷப்படறாரோ அந்த அளவுக்கு மழை பெய்யுமாம். கோபு சொல்லச் சொல்ல ஒரு சன்னமான கேலிச் சிரிப்பு விச்சாவிடம்.''

''என்ன விச்சா... உனக்கு நம்பிக்கையில்லையா?''

''இப்ப நான் இருக்கற நிலைல எனக்கு எதை நம்பறது எதை நம்பக்கூடாதுன்னே தெரியல.. சரி.. சரி.. என்ன செய்யணுமோ அதை செய்துடலாம். அனந்தகிருஷ்ணன் கிட்ட இன்னும் ஒரு வார்த்தை சரியா பேசலை. என் சார்புல நீயே ஏற்பாடு செய்துடேன்'' என்று செய்தி சொன்ன கோபுவிடமே பொறுப்பை ஒப்படைத்து விட்டுத் திரும்பினார்.

அறைக்குள் இருந்து அனந்த கிருஷ்ணனும், ரம்யாவும் திரும்பி வந்தனர். இருவரிடமும் அடப்பமான மௌனம்.

''அனந்தா.. வா மாடிக்கு போய் அப்பா அம்மாவை பார்க்கலாம்'' விஸ்வநாதன் அவன் தோள் மேல் கை போட்டு மாடிக்கு செல்லும் மரப்படிகள் நோக்கி நடந்தார்.

மெல்லச் சப்தம் எழுப்பியபடி அவர்களும் மாடிப்படி ஏறினார்கள்.

மாடியிலும் மெல்லிய இருள்! மன இருட்டை அப்படியே

எதிரொலிக்கிற மாதிரி.

ஸ்விட்சைப் போடவும்தான் வெளிச்சம் வந்து ஓரளவு பார்வை தெரிந்தது. குப்பென்று ஒரே மருந்து வாசம்.

''யாரது.. சற்றே இருமிவிட்டு ஒரு வயதானவர் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து, ''நான்தாம்ப்பா.'' என்கிற பதிலோடு விஸ்வநாதன் முன்னே சென்றார்.

''வந்துட்டானா உன் தம்பி...'' அடுத்த கேள்வியே அவர் அனந்தகிருஷ்ணனைப் பற்றித் தான் கேட்டார்.

''அப்பா...'' அனந்தாவும் நெகிழ்வுடன் முன்னே சென்றான். சற்றுத்தள்ளி அவன் அம்மா. மிக ஆழ்ந்த உறக்கத்தில், பார்வை அவளையும் வருடிவிட்டு திரும்பியது. அப்படியே காலில் விழுந்தான். சற்று தயங்கிவிட்டு ரம்யாவும் விழுந்தாள்.

ஆனால், அவரோ, ''எங்கடா அவன்.. வந்துட்டானா. வரலையா?'' என்றார் சற்றே அதிர்வாக,

விஸ்வநாதன் இந்த முறை பேசவில்லை. பதிலுக்கு அவர் கையை தேடிப்பிடித்து கீழே அவர் காலடியில் விழுந்து கிடக்கும் அனந்தகிருஷ்ணன் தலை மேல் கொண்டு சென்று வைத்தார்.

''அட வந்துட்டானா?'' என்று அவன் ஸ்பரிசத்தை வைத்து கேட்ட பிறகே அவருக்கு பார்வை மந்தம் என்பதே அனந்தகிருஷ்ணனுக்கு தெரிய வந்தது.

''என்னண்ணா இது... அப்பா அம்மாக்கு கால்லதான்

மூட்டுவலின்னேள். இங்க அப்பா கண்தெரியாம தடவறாரே.''

''ஆமாம் அனந்தா... பார்வை போய் காதும் சரியா கேக்கறதில்ல. கத்திப் பேசணும்.'' விஸ்வநாதன் படுசோகமாய் சொல்ல அனந்தகிருஷ்ணன் அப்பாவின் கரத்தை ஒருவித இறுக்கமுடன் பற்றினான்.

''அப்பா..'' என்றான் மிகமிக நெகிழ்வாய். அவரும் கன்னத்தை எல்லாம் வருடியவராய், ''அனந்தா எப்படிடா இருக்கே..?'' என்றார்.

''நன்னா இருக்கேன்பா.''

''செத்த பலத்த குரல்ல சொல் அனந்தா...''

''நன்னா இருக்கேன்பா....'' அவன் குரல் ஓங்கி ஒலித்தது கிட்டத்தட்ட அக்ரஹாரம் முழுக்க எதிரொலித்தது.

அந்த கிராமத்திலேயே நெடுநாட்களுக்கு பிறகு ஒருவன், ஒரே ஒருவன் நன்றாக இருப்பதாக மனம் விட்டுச் சொல்லும் ஒரு குரல் அது!

அப்படி ஒரு குரல் அந்த கிராமத்தில் ஒலித்து வெகு நாட்களாகி விட்டது.

பலர் அதைக்கேட்டு சிரித்தார்கள். சிலர் ''பாவம் அனந்தகிருஷ்ணன் தெரியாத்தனமா இந்த ஊருக்கு வந்துட்டான்.'' என்றார்கள்.

''அவனுக்கென்ன தலையெழுத்து... நன்னா சௌத் ஆப்பிரிக்காவுல ஜம்முன்னு ஜில்லுங்கற க்ளைமேட்ல இருக்கறத விட்டுட்டு இங்க வந்து நன்னா இருக்கேன்னு

வேற ஸ்டேட்மென்ட்டெல்லாம் விட்டுண்டு.'' வீட்டுத் திண்ணையில் உள்ள ஒரு பெரியவர் சென்டிமென்டாய் மிக வருத்தப் பட்டுக் கொண்டார்.

மாடியிலோ அன்புப் பரிமாற்றம் தொடர்ந்து கொண்டிருந்தது. அப்பாவைத் தொடர்ந்து அம்மாவிடம் சென்றான். எப்பொழுதும் எல்லோருக்கும் அம்மாதான் முதலில், ஆனால் அனந்துவிற்கு சிறு வயது முதலே அம்மா ஒரு இறுதி மனுஷியாகவே ஆகிவிட்டாள். பாட்டியாக வேண்டிய வயதில் தாயானதற்காக சந்தோஷப்படுவதா, துக்கப் படுவதா என்பது தெரியாமல் திண்டாடியே குழம்பிப் போவாள்.

இப்பொழுதோ முதுமையோடு அதன் எல்லா விதமான நோய்களும் அவள் உடம்பில் வாடகைக்கு வாசம் செய்கிற மாதிரி வாசிக்கத் தொடங்கி விட்டன.

''அண்ணா, அம்மா தூங்கறாளா, எழுப்பேன்.''

''வேண்டாம் அனந்தா... அவ தூக்க மாத்திரை போட்டுண்டு தூங்கறா, இல்லேன்னா மூட்டுவலி, ஒத்த தலைவலின்னு பிராணனை வாங்கிடுவா... ஏகத்துக்கும் மனப்பிராந்தி.''

விஸ்வநாதன் சொன்னதைத் தொடர்ந்து அவள் காலை மட்டும் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான். அப்படியே திரும்பி ரம்யாவைப் பார்த்தான். அவள் வேதனையின் உச்சத்தில் இருந்தாள்.

# 4

அஷ்டமாசித்துகளில் ஏழு வகை சித்துகளை அடைந்து விட்டு எட்டாவதாக உள்ள தெய்வத்தை அடைய முடியாமல் போனவர்கள் பலர் உண்டு. வெகு சிலரே அந்த தெய்வ நிலையை அடைந்தவர்கள். அப்படி எட்டாம் நிலையான தெய்வ நிலையை அடைய முக்கியமாக ஒரு உறுதி தேவை. அது எந்த நிலையிலும் தான் கற்ற ஏழுவித சக்திகளையும் யாருக்காகவும் பிரயோகிக்கக் கூடாது என்பது தான் அது.

அதாவது ஏழு சக்திகளையும் பணயம் வைத்தே எட்டாம் நிலைப்பாட்டை அடைய வேண்டும். இது என்ன கொடுமை, ஏழுவித சக்தியையும் உலக நன்மைக்காக பயன்படுத்தக் கூடாதா என்று கேட்கலாம்.

உலக நன்மைக்காக என்றால் எது உலக நன்மை? என்று ஒரு கேள்வி எழும்புகிறது. இன்றைக்கு நாம் பார்க்கும் ஒரு விஷயம் சரியாவதும், சரியாகப் பார்க்கும் ஒரு விஷயம் காலத்தால் தவறாவதும், மாறி மாறி நடக்கும் ஒரு பூமி இது.

இங்கே எல்லாமே மாயை. தப்பு, சரி என்றே தங்கள் கொள்கை கோட்பாடுகளுக்கேற்ப எடுக்கும் நிலைப் பாடுகள்.

எனவே இதை மாயை என்று உணர்ந்தவர்கள் இதைப் பயன்படுத்தி நன்மை புரிகிறேன் என்பதெல்லாம் ஆபத்தில் தான் அதனால் தனக்கு எதுவுமே தெரியாது என்கிற ரீதியில் மௌனமாக இருந்து கொண்டு, யோகிக்கான

***கடமையை மட்டும் புரிந்தபடி ஒரு அஷ்டமாசித்து பெற்ற ஒருவர் இருந்தாலே போதும். அவர் சித்துகளை பயன்படுத்தி உருவாக்க நினைத்த நன்மைகள் அவர் பொருட்டு தானாகவே நிகழும். அப்படிப் பட்டவர்கள் வாழும் உலகில் விளையாட்டாக சில பிழைகள் நிகழலாம். பெரிய துன்பங்கள் வரவே வராது. இந்த நூற்றாண்டில் அப்படி எல்லாம் தெரிந்தும், எதுவும் தெரியாததுபோல வாழ்ந்து எட்டாம் சக்தியான ஈசத்வத்தை அடைந்த ஒருவர் காஞ்சிப் பெரியவர்!***

**வீ**டு முழுக்க ஒரே புழுக்கம்!

கரண்ட் வேறு போய்விட்டிருந்தது.

ரம்யாவிற்கு நரகத்தில் இருப்பது போல இருந்தது.

விஸ்வநாதன் ஒரு விசிறியை எடுத்து வந்து அவளிடம் தந்து விசிறிக் கொள்ளச் சொன்னார்.

அனந்தகிருஷ்ணனோ இந்தப் புழுக்கமெல்லாம் ஒரு புழுக்கமா என்பது போல எங்கோ வெறித்தபடி இருந்தான்.

''அனந்தா.''

''சொல்லுண்ணா.''

''எப்படி இருக்கு உன் பொழப்பு?''

''இருக்கேண்ணா.''

''ஏண்டா சுரத்தே இல்லாம பேசறே. ஆமா எப்ப ரம்யாவை கூட்டிண்டு போகப் போறே?''

''அது அவ்வளவு சுலபமில்லண்ணா!''

''அப்ப எவ்வளவு நாள்தான் இப்படி பிரிஞ்சே இருக்க போறேள்?

''காசும் பணமும் பெரிசில்லேன்னு நினைக்கறவரை.''

சட்டென்று அவன் பதிலில் ஏராளமான உட்பொருள்.

''பைத்தியக்காரன் மாதிரி பேசாதே. ரம்யா உனக்கு அங்க போக இஷ்டம் தானே?''

''இஷ்டம்தான். ஆனா நானும் இங்க ஒரு காண்ட்ராக்ட்ல மாட்டிண்டு இருக்கேன்.''

''என்னம்மா பெரிய காண்ட்ராக்ட். கேன்சல் பண்ண முடியாதா அதை?''

''முடியாது. அப்படி பண்றதா இருந்தா நானும் சரி அவரும் சரி. இதுவரை வாங்கின எங்க சம்பளத்தை ரீஃபண்ட் பண்ணியாகணும்.''

''இது என்ன கொடுமை.''

''அது என்னண்ணா கொடுமை. இங்க நீங்க இருக்கறத விடவா?''

அனந்தகிருஷ்ணன் அம்பாரமாய் பரிதாபப்பட்டு விட்டு உள்ளே புழுக்கத்தில் இருக்க முடியாமல் மாடிப்படி ஏறினான்.

''எங்கே போறே?''

''மொட்ட மாடிக்கு. ஒரே புழுக்கமா இருக்கு.''

அவனை ரம்யாவும் பின்தொடர்ந்தாள்!

மொட்டை மாடி!

சன்னமாய் காற்று உலாத்தியபடி இருந்தது.

மொத்த ஊரும் தெரிந்தது. அங்கங்கே தென்னை மரங்கள் மட்டைகளை இழந்து ஒட்டைக்குச்சி போல நின்று கொண்டிருப்பதைப் பார்த்து அனந்துவுக்கு அழலாம் போல் இருந்தது.

''இங்க காத்து எப்படி வீசும் தெரியுமா? தலைமுடியே பிச்சுண்டு போற மாதிரி இருக்கும். இப்ப அதுக்குகூட கேடு வந்துடுத்து.''

''மழை போய்ட்டாலே எல்லாமே போய்ட்றதுன்னா என்ன பண்றது?''

''அதுசரி, ஒரு வருஷம் பொய்க்கும், இரண்டு வருஷம் பொய்க்கும். இப்படியா தொடர்ச்சியா..?''

''அக்ரமம் அதிகரிச்சா ஆண்டவன் இப்படித்தாம்பா தண்டிக்கத் தொடங்குவான்.''

அவன் புலம்பலுக்கு பதிலாக விஸ்வநாதனும் மாடிக்கு வந்து சேர்ந்தார்.

''சும்மா இருண்ணா. எங்க அக்ரமம் நடக்கலை. அமெரிக்கால நடக்கலையா. இல்ல ஆப்பிரிக்காவுலதான் நடக்கலையா? ஒரு பெரிய பில்டிங்கையே போட்டுத் தள்ளினான் பின்லேடன். லட்சக்கணக்கான பேரை கொன்ன இடி அமீனை விடவா? அங்கெல்லாம் பெய்யறது. இங்க பெய்யலைன்னா அதுவா காரணம்?''

''நீ என்ன சொல்றே?''

''இந்த அக்ரமம் ஆட்டுக்குட்டி, இதுக்கும் மழைக்கும் எந்த சம்பந்தமும் இல்லேங்கறேன்.''

''அப்ப எதனால மழை பெய்யலை.''

''இயற்கைன்னு சொல்றத தவிர வேற என்னத்தச் சொல்ல.''

''ரொம்ப தப்பு அனந்தா. மனுஷ வாழ்க்கையோட தர்மங்கள் தான் பூமியில எல்லாருடைய சந்தோஷத்துக்கும் காரணமா அமையறது.''

''அப்படின்னா இந்த தர்மம் ஏன் மேல் நாடுகள்ல வேலை செய்யமாட்டேங்கறது?''

''அது வேலை செய்யலைன்னு உனக்கு யார் சொன்னா?''

''பார்த்தா அப்படி தெரியலையே.''

''பார்க்க தெரியலைன்னு சொல்.''

ஒரு வேதாந்திரியாட்டம் விஸ்வநாதன் சொன்னதற்கு ரம்யாவிடமும் ஒரு கேலிப் புன்னகை பதிலாக அரும்பியது. விஸ்வநாதனும் கவனித்தார்.

''என்ன லேடி டாக்டர். நீயும் அனந்தா மாதிரியே யோசிக்கறவளா?''

''அஃப்கோர்ஸ். இந்த பாவம், புண்ணியம் அதனால சொர்க்கம், நரகம் இதுல எல்லாம் எனக்கு நம்பிக்கையே

இல்லை. எல்லாம் ஹம்பக்டிசரியாக அம்புலி மாமா விஷயம். புத்தி. மனுஷனோட புத்திதான் எல்லா இன்ப துன்பங் களுக்கும் காரணம்.''

ரம்யா தேர்ந்த மேடைப் பேச்சாளி மாதிரி பேசினாள். விஸ்வநாதன் அடுத்துக் கேட்டது தான் அவளை வெகுவாக யோசிக்க வைத்து விட்டது.

''அப்ப நீங்க இரண்டு பேரும் ஏன் பிரிஞ்சு கிடந்து கஷ்டப்படனும். உங்க புத்தியால அதை ஏன் உங்களால மாத்திக்க முடியல?''

''அது... அது... முடியும். ஆனா ரீபேமெண்ட் பண்ணனும்னு சொன்னேனே.''

''அப்ப ஏதோ ஒரு காரணம் கட்டி இழுக்கறதுன்னு சொல்.''

''நீங்க என்ன சொல்ல வரேள்.''

''அந்த காரணத்துல இருக்கு விஷயம். அதைத்தான் விதிங்கறோம்.''

''போறும் விட்ருங்கோ. இதுக்குமேல் இந்த விஷயத்துல பேச வேண்டாம். அவர் பல வருஷம் கழிச்சு வந்துருக்கார். இருக்கப் போறது சில நாட்கள்தான். வெட்டியா போகறதுல ஒரு பிரயோஜனமுமில்லை.''

ரம்யா சங்கடமான அந்த சூழ்நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளிவைக்கத் துடித்தாள்.

''அண்ணா. மன்னியபத்தி கொஞ்சம் சொல். மன்னிய

காப்பாத்த வழியே இல்லையா?''

''இருந்தா நான் அவளை அப்படி ஒரு இருட்டு ரூம்ல போட்டு வெச்சுருப்பேனா?''

''அப்கோர்ஸ். இந்த எய்ட்ஸ், கான்சருக்கெல்லாம் ஒரு ரைட் மெடிசின் இதுவரை கண்டுபிடிக்கப்படலை தான்.''

''கடவுளா பார்த்து அவளை காப்பாத்தினாதான் உண்டு.''

விஸ்வநாதனின் பதில் திரும்பவும் அனந்த கிருஷ்ணனைக் குத்தியது.

''நீ இப்படி கடவுள் கடவுள்னு சிந்திக்கறதாலதான் மன்னி விஷயத்துல பெருசா ஸ்டெப் எடுக்கலையோன்னு நான் நினைக்றேன்.''

''பைத்தியக்காரா. அந்த சிந்தனை இருக்கறதால் தான் மனுஷனாவே இருக்கேன். அவர் நிச்சயம் ஏதாவது பண்ணி நல்லது நடக்கும்னு நம்பிண்டு ஒவ்வொரு நாளையும் கடத்திண்டு இருக்கேன்.''

விஸ்வநாதனின் பதிலின் முடிவில் ''டொம் டொம் டொம் என்று தெருவில் சட்டிப்பானை முரசு ஒலிக்கும் சப்தம்!

இதனால ராமாபுரம் ஜனங்களுக்கு சொல்லிக்கறது என்னன்னா. நாளைக்கு காலம்பற சுந்தரானந்தான்னு ஒரு சாமியார் நம்ம ஊருக்கு வர இருக்கார். அவர் வந்தா மழை பெய்யுமாம். ஊருக்கும் நல்லதாம். ஆகையால அவரை சிறப்பா ஆரத்தி எடுத்து வரவேற்கும்படி பஞ்சாயத்தார் உத்தரவூவூவூ....''

பஞ்சாயத்து ஊழியன் குரல் மொட்டை மாடியில் விஸ்வநாதனில் இருந்து, அனந்தகிருஷ்ணன், ரம்யா காதுவரை ஒலித்தது.

அந்த இறுக்கத்திலும் அதைக் கேட்டு சிரித்து விட்டான் அனந்தகிருஷ்ணன்.

''என்ன அனந்தா அவநம்பிக்கையா?''

''என்னண்ணா பின்னே. மழை வரணும்னா அதுக்கு மேகம் வரணும். இவர் வந்தா எப்படி மழை பெய்யும்?''

''ஒரு நம்பிக்கைதாம்ப்பா.''

''இப்படி எல்லாம் கூடவா நம்பறது. அவர் என்ன கடவுளா?''

''நான் அப்படித்தான் நினைக்கறேன்.'' அதறாமல் பதறாமல் சொன்ன விஸ்வநாதனை அனந்தகிருஷ்ணன் சற்று கோபத்துடன் பார்த்தான்.

''என்ன... எதைவெச்சு நான் அவரை கடவுள்னு சொல்றேன்னு பாக்கறியா?''

''ஆமாம் அதைக் கொஞ்சம் சொல்லேன்.''

''நாளைக்கு அவர் வருவார். மழையும் வரும். அப்புறமா சொல்றேன். அப்பதான் நீயும் கொஞ்சம் நம்பிக்கையோட கேட்பே.'' விஸ்வநாதன் தற்காலிகமாக அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

ரம்யாவுக்கு சற்று ரிலீஃப் ஆக இருந்தது.

# 5

*‘அற்புதங்கள் செய்பவர்களை கடவுள் என்கிறோம். ஆபத்து சமயத்தில் கை கொடுத்து உதவுகின்றவர்களையும் கடவுள் என்றுதான் சொல்கிறோம்.*

*மனித சமுதாயத்தைப் பொறுத்த வரையில் அவர்களை வாழ்க்கைத் துன்பங்களை யாரெல்லாம் நீக்குகின் றார்களோ அவர்களெல்லாம் கடவுளர்கள்தாம்.*

*ஆனால் உண்மையில் கடவுளின் செயல்பாடு என்பது துன்பம் நீக்குவதோ, இன்பம் தருவதோ இல்லை. ஒரு விளையாட்டு நடக்கிறது. அதை நடத்துகின்ற ஒருவரும் இருக்கத்தான் செய்வார். அப்படி ஒருவன்தான் கடவுள். விளையாட்டில் வெற்றி, தோல்வி அதில் ஆடுகின்ற வர்களால் தான் உருவாகிறது. அந்த வெற்றியும், தோல்வியும் ஆட்டத்தை நடத்துகின்றவர்கள் கையிலா இருக்கிறது?*

*கூர்மையாக சிந்தித்தால் இதற்கான உண்மை விளங்கும். வெற்றியும், தோல்வியும் விளையாடுவதால் உருவாகிறது.*

*விளையாட்டு என்பதோ கால நேரத்தை சுவையாக்கிக் கொள்ள நாம் செய்யும் ஒரு முயற்சி என்பதில் முடியும்,*

*அப்படியானால் காலம் சுவைபடுவது என்பது போட்டிக்குரிய செயல்பாடுகளால் தான். அந்த செயல்*

*பாட்டையே விளையாட்டாக விவரிக்கிறோம். விளையாடினாலோ ஒன்று தோற்றாக வேண்டும் அல்லது ஜெயித்தாக வேண்டும். முதலில் ஜெயிக்கிறோம் என்றே வைத்துக் கொள்வோமே. அது வெற்றியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்கிற கவலையிலும், அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட நம்மை இட்டுச் செல்லும்.*

*தோற்றுவிட்டாலோ அடுத்து வெற்றி பெற அது தூண்டுகோலாக அமையும். தோற்றவன் எப்பொழுதும் தோற்றுவிட்ட அந்த தருணத்தில் தான் கவலைப்படுவான். பிறகு மெல்ல அதிலிருந்து மீண்டு நமக்கான ஒரு வெற்றி காத்திருக்கிறது என்றே நினைப்பான். அதை அடைய போராட ஆரம்பித்துவிடுவான்.*

*ஆனால் வெற்றி பெற்றவனோ அப்படி இல்லை. வெற்றியை கைவசம் வைத்துக் கொண்டு அடுத்து தோல்வி வந்துவிட்டால் என்ன செய்வது என்கிற கவலையிலேயே பெரும்பாலும் இருப்பான்.*

*கூர்ந்து கவனித்துப் பாருங்கள். மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றவர்கள் அதைத் தக்க வைத்துக் கொள்ள எதை வேண்டுமானாலும் செய்பவர்களாக மாறி விடுவதைப் பார்க்கலாம். அதுமட்டுமல்ல. சிறு தோல்விக்கும் நடுங்கும் ஒரு மன அமைப்பு அவர்களுக்கு உருவாகி விடும்.*

*வேடிக்கையாக இருக்கிறதல்லவா? காலத்தை சுவையாக்கிக் கொள்ளத்தான் விளையாட்டு. அதிலோ வெற்றி, தோல்வி என்று இரு நிலைப்பாடு, அதில் தோல்வியோ ஆரம்பத்தில் தான் துயரத்தை அளிக்கிறது. ஆனால், வெற்றியோ தொடக்கத்தைத் தவிர அதன்பின் தொடர்ந்து துயரத்தையே அளிக்கிறது.*

இதில் எந்த நிலைப்பாடு தான் உண்மையில் சரியானது என்கிற கேள்வி எழுகிறதல்லவா?

எதற்கு இந்த குழப்பம்.? விளையாடினால் தானே இந்த விசாரம். குழப்பம் எல்லாம்? விளையாடாமலும், விளையாட்டை நடத்துகின்றவர்களாக, அதாவது வெற்றி, தோல்விக்கு சம்பந்தமில்லாதவர்களாக மாறிவிட்டால்..?

அப்படி மாறிவிடும் ஒரு நிலைப்பாடும் கூட தெய்வ நிலைப்பாடுதான்! ஆனால் விளையாட்டை நடத்துகின்ற நிலைப்பாடும் சாதாரண ஒன்றல்ல. விளையாட்டு பற்றி நன்றாக அறிந்தவர்களாலேயே அதை நடத்திக் காட்ட முடியும். அதற்கான விதிகளை சரியாக நிர்ணயம் செய்து விளையாடுபவர்களை ஒழுங்காக வழிநடத்த முடியும்.

இங்கே விளையாட்டு என்று நான் குறிப்பிட்டது வாழ்க்கையை. வாழ்வின் வெற்றி, தோல்விகள் வாழ்கின்ற விதத்தில் உருவாகிறது. நமது வாழ்க்கை ஒரு அணி என்றால், நமது கர்மவினை இன்னொரு அணி. இடையில் நிற்கும் நடுவர்தான் கடவுள் என்பவர்.

கர்மவினை நம்மை வென்று கோல் போட, எல்லா முயற்சிகளும் செய்யும், அதை வெல்ல நாமும் முயலுதல் வேண்டும். கடவுள் சரியாக விளையாடினால், நீதியாகிய வெற்றியை வழங்கத் தயாராக இருக்கிறார்.

விளையாடி அனுபவம் பெற்று ஒரு சமயம் வெற்றி, ஒரு சமயம் தோல்வியை கண்டு, பின் எதனால் அது வந்தது. உண்மையில் வெற்றி என்பது என்ன? தோல்வி என்பது என்ன என்பதை உணர்ந்து நான் கூறியது போல தொடக்கத்தில் துன்பமளித்தாலும், போகப் போக நன்மை தருவது தோல்வியே என்பதையும், தொடக்கத்தில் இன்பம்

*தந்தாலும், போகப்போகத் துன்பமளிப்பது வெற்றியே என்பதையும் கசடற உணர்ந்து, இரண்டுமே வேண்டாம் என்று அதிலிருந்து விலகுவது அசாதாரணமான விஷயம்.*

*அஷ்டமா சித்துவில் முதல் ஏழு சித்துகள் மேலே குறிப்பிட்ட வெற்றி, தோல்வியை தவிர்த்து நிரந்தர வெற்றியாளனாக நம்மை! ஆக்கிவிட துணை செய்யும். ஆனாலும் தொடர்ந்து விளையாடிக் கொண்டே இருந்தாக வேண்டும். ஆடுவதை நிறுத்தி விட்டாலோ அந்த ஏழு சித்துகளால் ஒரு பயனுமில்லை.*

*மாறாக அந்த ஏழே கையில் வைத்துக் கொண்டு தொடர்ந்து ஆடிக் கொண்டே இருப்பதைவிட, அதை அப்படியே துறந்துவிட்டு அதனால் கிட்டிய ஞான மனத்தோடு விளையாட்டை நடத்துகின்ற ஒருவனாக அதாவது நம் எதிரில் விளையாட்டாகிய வாழ்க்கையை வாழும் மனிதர்களைப் பார்த்து அவர்களை நெறிப்படுத்தி அவர்களையும் விளையாடியது போதும். இந்த வெற்றி தோல்விகளில் இருந்து விலகி தெய்வ நிலைக்கு வாருங்கள் என்று அழைக்கும் கடமையைச் செய்வதே சரியான செயல்பாடாகும்.*

*அப்படிச் செய்கின்ற பலர், இந்த நாட்டில் இருந்திருக் கின்றனர். பகவான் ரமணர் முதல் பகவான் யோகிராம் சுரத்குமார் என்று எத்தனை எத்தனையோ ஞானிகள்?'*

**வா**சலில் பெரிதாக நாதஸ்வர மேள சப்தம் கேட்டு கண் விழித்தார்கள் அனந்த கிருஷ்ணனும், ரம்யாவும்!

மாடியில் ஒரு அறையில் அவர்கள் படுத்திருந்தனர்.

அறை ஜன்னலை திறந்து வெளியே பார்த்தபோது வீதி

பளிச்சென்று தெரிந்தது.

வீதி முழுக்க வாசல் தெளித்து கோலம் போடப் பட்டிருந்தது. ஒரு ஆச்சரிய அதிர்ச்சியாக விஸ்வநாதன் தன் வீட்டு வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த அனந்தகிருஷ்ணனுக்கு வெட்கமாகி விட்டது.

''ரம்யா...போ... அண்ணாகிட்ட இருந்து கோலமாவை வாங்கி நீ கோலம் போடு.'' என்றான்.

''ஐய்யோ... எனக்குத் தெரியாதே.'' என்று கொட்டாவி பிரிய நெளிந்தாள் ரம்யா, அவனுக்குள் அது மேலும் வெட்கத்தை உருவாக்கியது.

''கோலம் போடத் தெரியலைன்னு ஒரு பொண்ணு சொல்றதை இப்பதான் கேக்கறேன்' என்றான் சற்று கோபமாக.

''நான் ஹாஸ்டல்ல படிச்சு வளர்ந்தவ. தெரியாததை தெரியாதுன்னுதான் சொல்வேன். ஆமா எதுக்கு இந்த கூத்து.'' என்று பதில் கேள்வி எழுப்பினாள் அவள்.

''தெரியல. ஒருவேளை அந்த ஸ்வாமிகள் வரப் போறார்னு அண்ணா சொன்னாரில்லையா. அதுக்காக இருக்கலாம்'' என்றவன் மளமளவென்று கீழே இறங்க ஆரம்பித்தான். வாசல் பக்கமும் வந்தான்.

''குட்மார்னிங் அண்ணா.''

''வெரி குட்மார்னிங்''

''என்னண்ணா இது. நீ போய் கோலம் போட்டுண்டு.''

''ஏம்ப்பா. ஆம்பளைகள் கோலம் போடக் கூடாதுன்னு ஏதாவது இருக்கா என்ன?''

''அப்படி இல்லை. ஒருத்தருக்கு மூணு பேர் பெண்கள் இந்த வீட்ல இருந்தும் நீ போடறது சங்கடமா இருக்குண்ணா.''

''தப்பா சிந்திக்கறே. ஜானகி பல வருஷம் கோலம் போட்டவ. இப்ப அவளால முடியல. நான் போடறேன். அவ்ளோதான்.''

''ஆமா. எதுக்கு இத்தனைகளேபரம்?''

''நான்தான் சொன்னேனே. அந்த ஸ்வாமிகள் வரார்.''

''அவர் யார் கோலம் போட்டிருக்கார், போடலைன்னா பார்க்கப் போறார்.''

''அவர் பார்க்கறாரோ, பார்க்கலையோ. நாம நம்ம மன அழகை அவரை உத்தேசிச்சு காட்ற ஒரு சம்பிரதாயம் இது.''

விஸ்வநாதனின் பதிலைக் கேட்டபடி ரம்யா பின்தொடர்ந்து வந்தாள். அவள் கைகளில் டூத் பிரஷ் பேஸ்ட்டுடன். அதை அனந்தகிருஷ்ணனுக்காக நீட்டினாள். அவனும் வாங்கிக் கொண்டு மௌனமாக புழக்கடைப் பக்கம் சென்றான்.

கிராமத்து வீடாகையால் கிணறும், சிமெண்டுத் தொட்டியும் வரவேற்றன. பக்கமாய் அவர்கள் அங்கே புழுங்கும் நீரைக் குடித்து வளர்ந்திருக்கும் திரட்சியான வாழை மரம்.

தொட்டித் தண்ணீரில் நல்ல சிலுசிலுப்பு. பக்கமாய் ஒரு மன்னார்குடி பித்தளைச் செம்பு. அதில் நீரை மொண்டு வாயினுள், விட்டு கொப்பளிக்கும் போது பால்யப்பிராய ஞாபகம் ஒரு மெலிசான பாலிதீன் தாள் போல தோன்றி மனமூட்டம் போட்டது. இப்பொழுது என்ன தான் கோட்டு சூட்டு போட்டு விமானப்பயணம் செய்து தளுக்காக வாழ்ந்தாலும், அந்தநாளின் உற்சாகமும், மன நிம்மதியும் இப்பொழுது இல்லாது போய் விட்டது போல தோன்றியது.

ரம்யா விஸ்ராந்தியாக பல் விளக்கியபடி இருந்தாள். அவளுக்கு எப்பொழுது ஊருக்கு போவோம் என்று இருந்தது. அதைக் கேட்கவும் செய்தாள்.

''ஆமா... எப்ப புறப்படப் போறோம்?''

''ஏன் ரம்யா... உடனே திரும்பணும் போல இருக்கா?''

''என்ன வேலை இங்க. அதான் கேட்டேன்.''

''சென்னைல தான் என்ன பண்ணப் போறேன்?''

''ஸோ...''

''இங்க ஒரு நாலைஞ்சு நாள் இருந்துட்டு போவோமே.''

''என்ன தலை எழுத்து. ராத்திரியெல்லாம் ஒரே கொசுக்கடி''

''ஆனாலும் இங்க பொலூஷனே இல்லை. அதை நீ ஒத்துக்கணும். அண்ணா மன்னிக்கும் நாம வந்தோம். நாலு நாள் தங்கினோம்னா ஒரு சந்தோஷம் தானே?''

ரம்யா பதிலுக்கு ஒருமுறை முறைத்தாள்.

''டேக் இட் ஈஸி டியர். இது நான் பொறந்து வளர்ந்த ஊர். இங்க நீ பார்க்க வேண்டிய இடங்கள் எவ்வளவோ இருக்கு தெரியுமா?

''ஆமா... பெரிய டிஸ்னிவேர்ல்ட்.'' ரம்யாவின் குரலில் பழிப்பு.

''டிஸ்னிவேர்ல்டைவிட த்ரில்லான ஒரு இடம் இருக்கு. தெரியுமா?''

''என்ன, ஏதாவது பாழடைஞ்சகோவிலும், அங்கு ஒரு குகையும் இருக்காக்கும்.''

அவள் அப்படிக் கேட்டதும் தான் தாமதம். அவனுக்கு ஊருக்குத் தெற்கில் உள்ள பத்ரகாளி கோவிலும், அங்குள்ள விக்கிரமாதித்தன் குகையும் உடனே ஞாபகத்துக்கு வந்தன.

''ஏய்.. ரம்யா... உனக்கு ஆனாலும் மகா ஞான திருஷ்டி, எப்படித் தெரியும். இந்த ஊர்ல அப்படி ஒரு கோவில் இருக்குன்னு.'' எதிர் கேள்வியை வாய்க்கொப்புளிப்போடு கேட்டுவிட்டு முகத்தையும் கழுவிக் கொண்டான்.

''போறும்... அசடு வழியறது.'' அவளும் சிணுங்கினாள். வெளியே மேளதாள சப்தம் சற்று ஓங்கலாக கேட்டது.

''ஸ்வாமிகள் வந்துட்டார். ஸ்வாமிகள் வந்துட்டார்.'' குரல் கேட்டது.

''ரம்.. வா... அந்த ஸ்வாமிகள் வந்துட்டாராம். மழைச்சாமியார்ல இவர். மழை வருதான்னு பார்ப்போம்.''

அனந்தா சின்னக் குழந்தையின் குதூகலத்தோடு வாசல் நோக்கி ஓடினான். ரம்யாவுக்குள் எரிச்சல் பீறிட்டது.

ஊருக்கு கிளம்பலாம் என்று சொல்வான் என எதிர் பார்த்தாள். ஆனால் நாலு நாள் இங்கேதான் என்கிறான். பதினைந்து நாளில் மூன்று நாள் ஏற்கெனவே இழந்தாகி விட்டது. இங்கே நாலுநாள் என்றால் சரிபாதி ஆகி விடுகிறது.

அவளுக்கு ஆற்றாமையோடு கோபம் பீறிட்டது. அதிசயமாக சேலை உடுத்தியிருந்தாள். அதன் நுனித் தலைப்பை போட்டு கசக்கு கசக்கியபடி அவளும் வாசல் நோக்கி நடந்தாள். எல்லோருமே வாசலில் தான் நின்று கொண்டிருந்தனர். தெருவின் துவக்கத்தில் அடப்பமாக கூட்டம். ஒரு பெரிய பட்டுக்குடை ஒன்றை பிடித்தபடி ஒருவர் தெரிந்தார். அவருக்கு அருகில்தான் அந்த சாமியாரும் இருக்க வேண்டும் என்று அனந்தா நினைத்தான்.

உண்மைதான்! காவி உடை காவிச் சட்டை மார்பு தொடும் தாடி, பாகவதர்கள் போல பின்தலை, கழுத்தில் ஒரு ஸ்படிக மாலை. நெற்றியில் கோபிசந்தனம். உதடு, ராம்... ராம்... ராம்... என்று ஜெபித்தபடி இருக்க, சுந்தரானந் ஸ்வாமிகள் என்னும் அவர் மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தார். பார்ப்பவர்களை எல்லாம் கண்களாலேயே ரட்சித்தார். எல்லோரும் கைகளைக் கூப்பினர். சிலர் ஓடிச் சென்று காலில் விழுந்தனர். சிலர் நிறைய பூக்களை எல்லாம்

காலில் தூவி வழிபட்டனர். அனந்தாவுக்கு இவ்வளவையும் தன் வீடியோ கேமராவில் பதிவுசெய்து கொண்டால் என்ன என்று ஒரு எண்ணம். விறுவிறுவென்று உள்ளே சென்று சூட்கேசில் இருந்த தன் ஹேண்டி வீடியோ கேமராவை எடுத்து வந்து மளமளவென்று ஷூட் செய்ய ஆரம்பித்தான். ரம்யாவுக்கு எல்லாம் வேடிக்கையாக வினோதமாக இருந்தது. அந்த ஸ்வாமிகளும் விஸ்வநாதன் வீட்டு வாசலுக்கு வந்து விட்டார். விஸ்வநாதன் விழுந்து சேவித்தார். ஸ்வாமிகள் அவர் தலையைத் தடவி ஆசிர்வதித்தார்.

''விஸ்வநாதன் இந்த ஊரோட ஒன் ஆஃப்தி சீனியர் சிடிசன். பாவம் இப்ப ரொம்ப மன வருத்தத்துல இருக்கார். இவர் மனைவிக்கு ரத்தப் புத்து நோய்.''

ஒருவர் ஸ்வாமிகள் காதோரமாய் எடுத்துக்கொடுத்தார். ஸ்வாமிகள் நின்று ஒரு பார்வை பார்த்தார். பின் தன் கழுத்து ஸ்படிக மணி மாலையை கழற்றி விஸ்வநாதனை அருகில் அழைத்து அணிவித்தார்.

''உங்க கஷ்டம் தீர்ந்திடும். அந்த ராமன் தீர்த்து வைப்பான்'' என்றார். விஸ்வநாதனுக்கு நின்ற இடம் நழுவுவதுபோல ஒரு பிரமை. ''ரொம்ப சந்தோஷம் ஸ்வாமி. என் ஜானகி பிழைச்சா போதும். அப்படியே ஊருக்கு மழையும் வரணும். செடி, கொடியெல்லாம் கருக ஆரம்பிச்சாச்சு. மனுஷா சோத்துக் கில்லேன்னா, எங்க கிடைக்குமோ அங்க ஓடிப்போயிடுவா. ஆனா இந்த மரம்,செடிகள் என்ன பண்ணும்? பாவமில்லையா?''

விஸ்வநாதன் அஃறிணை உயிர்களுக்காக கவலைப்பட்டு பேசியது அவரை மகிழ வைத்தது.

''வள்ளலாராட்டம் செடி, கொடிகளுக்கெல்லாம் வக்காலத்து வாங்கிப்பேசற, உங்க நல்ல எண்ணத்துக்கு ஒரு குறையும் வராது.'' என்றார் ஸ்வாமிகள். பின் ஒரு புன்னகையோடு தொடர்ந்து நடை.

அனந்தா அவர் பேசியது, விஸ்வநாதன் பேசியது என்று சகலத்தையும் வீடியோவில் பதிவுசெய்து கொண்டே பின் தொடர்ந்தான்.

அவரது நடை தெருவின் முடிவில் உள்ள பெருமாள் கோவிலில் முடிந்தது. ரம்யாவுக்கு இதெல்லாம் சுத்தமாக பிடிக்கவில்லை. வீட்டிலேயே ஒரு மூலையில் முடங்கி விட்டாள். நடுநடுவே ஒன்றுக்கு, மூன்று பேராக அந்த வீட்டில் இருக்கும் வியாதியஸ்தர்களின் முக்கல், முனகல், இருமல் சப்தங்கள் வேறு.. அவளுக்கு எரிச்சல் வர ஆரம்பித்தது.

***கோ***வில்!

ஒரு பெரிய மேடை போட்டிருந்தார்கள். அதில் ஸ்வாமிகள் ஏறினார். எல்லோருக்கும் தெரியும்படி அமர்ந்து கொண்டார். கையை உயர்த்தி ஆசிர்வாதம் செய்தபடியே இருந்தார். இராமாபுரத்தின் பரம வைதீகரும், கோவில் அர்ச்சகருமான ராமகிருஷ்ண அய்யர் என்பவர் மைக்கைப் பிடித்து பேச ஆரம்பித்திருந்தார். சுற்றிலும் திரளான கூட்டம்.

எல்லோரும் வைத்த விழியை எடுக்கவில்லை.

''எல்லோருக்கும் என் நமஸ்காரம்! இன்னிக்கு ஸ்வாமிகள் நம்ம ஊருக்கு வந்துருக்கார். அது நாமெல்லாம் செஞ்ச பாக்யம்னுதான் சொல்லணும். ஸ்வாமிகளைப் பத்தி சொல்லணும்னா ஒரு நாள் போறாது. பேசிண்டே போலாம். இருந்தாலும் ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லிக்க விரும்பறேன்.

ஸ்வாமிகள் சர்பக்காப்பு தரிச்சவர். அதாவது அவரை நோக்கி வந்த ஒரு நல்ல பாம்பை தன் கழுத்துல சிவபெருமானாட்டம் விட்டுண்டு காட்சி தந்தவர். அப்ப அவருக்கு வயசு மூணுன்னா யாராலையும் நம்ப முடியாது. சர்பத்தை விஷஜந்துன்னு சொல்வா, ஆனா அதுக்கு, ஸ்வாமிகள் ஒரு கடவுள் பிறப்புன்னு தெரிஞ்சிருந்தது தான் ஆச்சரியம். அப்புறம் தான் ஸ்வாமிகளோட அப்பா அம்மாவே தெரிஞ்சுண்டான்னா பார்த்துக்குங்களேன். இன்னிக்கு இந்த லோகத்துல நம் கண்ணுக்கு தெரிஞ்சு நடமாடற ஒரே கடவுள் மனிதர் ஸ்வாமிகள் தான். அஷ்டமா சித்துவும் அவர் வசத்துல இருக்கு. அவரால ஒரே சமயம் இங்கேயும் இருக்க முடியும். அமெரிக்காவுலையும் சஞ்சரிக்க முடியும்.

ஒரு சமயம் ஒரு கோவில் கும்பாபிஷேகத்துல நம்ம ஸ்வாமிகள் கலந்துண்டார். கும்பாபிஷேகத்துல சப்த நதிகளோட ஜலமும் குடத்துல இருந்தது. அதைக் கொண்டு கலகாபிஷேகம் பண்ணவேண்டியது தான் பாக்கி. அப்ப பார்த்து ஒருத்தர் தெரியாத்தனமா தவறி விழுந்து கங்கா

ஜலம் இருக்கற குடம் கவுந்துடுத்து. எல்லா ஜலமும் தரைல பரவி கும்பாபிஷேகத்துக்கு ஜலம் இல்லைங்கற ஒரு நிலைமை. கோவில் கமிட்டியை சேர்ந்தவோ தவிச்சுப் போய்ட்டா. அப்ப ஸ்வாமிகள் ஒரு அற்புதம் செய்து வெச்சார். கவுந்துட்ட அந்த கங்கை ஜலம் இருந்த குடத்தை எடுத்துண்டு வரச்சொல்லி தன் கையை அதை நோக்கி நீட்டினார். அவர் உள்ளங்கைல இருந்து கங்கை பாஞ்சு குடம் நிரம்பியதை பலர் பார்த்தா. அப்படியே புல்லரிச்சு போச்சு ஒவ்வொருத்தருக்கும்.''

கோவில் அர்ச்சகர் ராமகிருஷ்ணய்யரின் பேச்சு வீடியோ கேமராவும் கையுமாய் படம் பிடித்தபடி இருந்த அனந்தாவை ரொம்பவே நெளிய வைத்தது. பக்கத்தில் கையை கட்டிக் கொண்டு நின்றபடி அந்த பேச்சை கேட்டபடி இருந்தார் விஸ்வநாதன்.

''அண்ணா... என்ன இது? கோவில் அர்ச்சகர் இப்படி புளுகறார்.''

''உஸ்ஸ்... சும்மா இருடா... அபச்சாரமா எதையாவது பேசாதே.''

''எது அபச்சாரம்... இங்கேயும் இருப்பாராம் ஸ்டேட்ஸ் லையும் இருப்பாராம்... கங்கையும் கைவழியா வந்துதுன்னா எந்த காலத்துல இருந்துண்டு எதை பேசறதுன்னு ஒரு விவஸ்தை வேண்டாமா?''

அவர் கேட்டபடி இருக்க. அய்யரின் பேச்சு ஒரு முடிவிற்கு வந்திருந்தது. அடுத்து ஸ்வாமிகள் பேச முன்

வந்திருந்தார்.

''கொஞ்சம் சும்மா இரு... ஸ்வாமிகள் பேசப் போறார்.''

''கேக்கத்தானே போறேன்... அவரே அந்த புளுகு புளுகியிருக்கார். இவர் இமாலயப் புளுகே புளுகப் போறார்னு தான் நினைக்கறேன்.''

அனந்தகிருஷ்ணன் மீண்டும் விஸ்வநாதன் காதோரம் கிசுகிசுத்தான்.

ஸ்வாமிகளும் வாயைத் திறந்தார். ''எல்லோருக்கும் என் ஆசிர்வாதங்கள். என்னைப் பற்றி அர்ச்சகர் ராம கிருஷ்ணன் என்னென்னவோ பேசினார். அதெல்லாம் எதுக்கு? இந்த லோகத்துல சஞ்சாரம் பண்ற பல கோடி ஜீவன்கள்ல நானும் ஒருத்தன். உங்களுக்கும் எனக்கும் ஒரே ஒரு வித்யாசம்தான். உங்களுக்கெல்லாம் நிறைய சம்பாதிக் கணும், குடும்பம் குட்டிகள்னு நூறு வருஷம் வாழணும்னு ஆசை இருக்கலாம். எனக்கு அப்படி இல்லை. எனக்கு இந்த உடம்பைச் சுமந்துண்டு, பசிக்கு சாப்ட்டுண்டு சதா சுவாசிச்சுண்டு வாழற இந்த வாழ்க்கை சுத்தமா பிடிக்கலை.

எவ்வளவு வாழ்ந்தாலும் ஆசை அடங்காத இந்த வாழ்க்கை ஒரு வாழ்க்கையா என்ன? எனக்கு தேவை மோட்சம்... முக்தி... திரும்பத்திரும்பப் பொறக்கற இந்த பொறப்பு போதும்கறதுதான் என் எண்ணம். என்னை இந்த கோவிலைச் சேர்ந்தவாளும், ஊர்க்காராளும் இந்த ஊருக்கு வருவேளான்னு கேட்டா. மழையே இல்லை. பயிர்க ளெல்லாம் கருகிண்டிருக்குன்னா. எனக்கும் உங்க கஷ்டம்

புரியறது. மழைங்கறது இறைவனோட கருணை, எப்ப மழை பெய்யலையோ அப்ப இறைவன் கோபமா இருக்கான்னு அர்த்தம். அவன் கோபம் இரண்டு விதம். ஒண்ணு அசுர வதம் பண்ணி அழிக்கற மாதிரி ஆவேசமானது. இன்னொண்ணு செல்லக் கோபம். மழையை தராத கோபம் செல்லக் கோபம்னு சொல்லலாம்.

அதுக்கு சரியான ஒரு காரணம் இருக்கு. நமக்கு காவலா இருக்கற இயற்கை நம்மை விட பெரிசு. அதை நாம கடவுளா நினைக்க தவறும்போது இப்படி எல்லாம் ஆறது. காத்து இல்லேன்னா மூச்சுவிட முடியுமா? ஆனா இன்னிக்கு அதுல எவ்வளவு கரிப்புகை?

பூமியில்லேன்னா நாம எது மேல வீடு கட்டுவோம். ஆனா இந்த பூமி எப்படி இருக்கு? எங்க பார் குப்பை கூளம். பிளாஸ்டிக் கலாச்சாரத்தால மழைத் தண்ணிய பூமிக்குள்ள நுழையவிடாதபடி பண்ணிட்டோம். எங்க பார் பாலிதீன் பேப்பர், பிளாஸ்டிக் கப்தான்!

நெருப்பையும் நாம மதிக்கறதேயில்லை. ஒருத்தன் போற போக்குல சிகரெட் பிடிக்கறான். அப்புறமா அதை காலடில போட்டு மிதிச்சு அணைக்கறான். எவ்வளவு பெரிய பாவம் இது?

தண்ணியை லிட்டர் பத்து ரூபான்னு விக்க ஆரம்பிச்சிருக்கோம். விக்கலாமா? ஆகாசத்தில் இருந்து வர்ற மழை இலவசமா தானே வர்றது? ஆறு, குளம்லாம் ஊருக்கு பொதுவாச்சே. தண்ணிக்கு மேகம் நம்மகிட்ட காசு

கேட்டா நம்மால கொடுக்க முடியுமா?

அஞ்சாவது பூதமான ஆகாயம் தான் சுத்தமா இருக்கா? எப்ப பார் ஒரே புகை. அசுத்தம். இப்படி இயற்கையை நாம மதிக்கறதேயில்லை. நாம இருக்கப் போவது அம்பது வருஷமோ. அறுபது வருஷமோ. ஆனா இதெல்லாம் லட்சம், கோடி வருஷமா இருக்கற விஷயங்கள். அது பெருசா. நாம பெருசா? அதை தொந்தரவு பண்ணும்போது பதிலுக்கு அது கோபத்தை காட்றது. அதனால் தான் மழை இல்லை. எங்க பார் வறட்சி.

இந்த சந்தர்ப்பத்துல சிந்திக்கணும். தெளிவா சிந்திக்கணும், பஞ்ச பூதங்களை மதிக்கக் கத்துக்கணும். குப்பை கூளம் கூடாது. புகைக் கலாச்சாரமே கூடாது. நெருப்பையும் பக்தியோட கையாளணும். தண்ணி உப்பை யெல்லாம் தானமாக தான் கொடுக்கணும். விக்கக் கூடாது. ஆகாசத்துல தான் ஆண்டவன் இருக்கான். அவனோட வீடு அது. அதை தூய்மையா வெச்சுக்கணும். இந்த ஞானம் வந்துட்டா போதும். மழை வந்துடும் சந்தேகம் வேண்டாம்.

இவர் பேச்சு கருத்தளவில் நன்றாகத்தான் இருந்தது.

''அப்ப இவரால... மழை வரவைக்க முடியாதுன்னு சொல்லாம சொல்றாரா?'' கிசுகிசுத்தான் அனந்தா.

''சும்மா இரு அனந்தா... அவர் காதுல விழுந்துடப்போறது'' நெளிந்தார் விஸ்வநாதன். ஸ்வாமிகள் ஒரு வழியாக கருத்தை முடித்துக் கொண்டார்.

''நான் பகவான்கிட்ட பிரார்த்தனை பண்ணிக்கறேன்.

உங்க சார்பா மன்னிப்பும் கேட்டுக்கறேன். நிச்சயம் அவன் மனசு குளிர்ந்து மழை பெய்து, பயிர் பச்சை எல்லாம் செழிக்கும்னு நம்புவோம்'' என்றார்.

அதன்பின் எல்லோரும் வரிசையில் நின்று அவரிடம் தீர்த்தம் பெற்றுக் கொள்ளத் தொடங்கினர். அப்பொழுது சில சித்து வேலைகளையும் செய்ய ஆரம்பித்தார்.

ஒருவர் பூச்சரத்தை ஒரு பந்தாக அவர் கையில் கொடுத்தார். அதை விடுவித்தார். உள்ளே ஒரு கணபதி விக்ரகம் இருந்தது. கொடுத்தவருக்கு சிலிர்த்துவிட்டது.

இன்னொருவர் இரண்டு ஆப்பிள் பழம் கொடுத்தார். அதை நறுக்கச் சொன்னார். நறுக்கினார் உள்ளே மகாலட்சுமி விக்ரகம்.

அடுத்தவர் தந்த வாழைப் பழத்துக்குள்ளே குட்டிவேல்!

அனந்தகிருஷ்ணன் கண்களை கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தான்.

''இது என்ன மேஜிக்?''

''மேஜிக் இல்ல... இதெல்லாம் ஸ்வாமிகளோட சித்து விளையாட்டு.''

''சித்து விளையாட்டுன்னா?''

''அதான் பாக்கறியே... இதான்!''

''இது எப்படின்னு தெரியலியே.''

''எனக்கு பதில் தெரிஞ்சா நான் ஏன் இப்படி

இருக்கேன்.''

விஸ்வநாதன் அவனைப் பார்த்து திருப்பிக் கேட்டுவிட்டு ஸ்வாமிகளை நெருங்கினார்.

அவருக்கு ஆகாயத்தில் இருந்து ஒரு நவரத்ன மாலையை வரவழைத்து கொடுத்தார். கொடுத்ததோடு. ''கொஞ்ச நாளைக்கு கிரகங்கள் உன் வரைல செயல்படாது. நீ கேட்டதெல்லாமும் ஸ்வாமி தர தயாரா இருக்கார்.'' என்றார்.

விஸ்வநாதனுக்கு சிலிர்த்துவிட்டது. பின்னாலேயே தான் இருந்தான் அனந்த கிருஷ்ணன். விஸ்வநாதன் நகரவும் ஸ்வாமிகள் முன் சென்று நின்றான். துளையிடுவது போல ஒரு பார்வை ஊடுருவிப் பார்த்து விட்டு அவரும் சிரித்தார். கையை நீட்டச் சொல்லி உத்ருணியால் தீர்த்தம் விட்டார். அவனுக்கு அதை குடிக்கக் கூட தோன்றவில்லை. ஆனால் அவரிடம் நிறைய கேள்விகள் கேட்கவேண்டும் என்கிற துடிப்பு.

''உங்ககிட்ட நிறைய கேள்விகள் கேட்கனும்'' என்றான் கைத்தீர்த்தம் சொட்டச் சொட்ட...''

''முதல்ல தீர்த்தத்தை குடி.''

அவனும் குடித்தான்.

''என்ன மனதுக்குள்ள சைன்ஸால ஒரே தொல்லையா?''

அவனுக்கு புரியவில்லை. ஆனால் விஸ்வநாதன் புரிந்ததுபோல் திரும்பிவந்து. ''ஸ்வாமிகள் மன்னிக்கணும்.

இவன் என் தம்பி. சௌத் ஆப்பிரிக்காவுல டாக்டரா இருக்கான். எதுலையும் புத்திதான் பெருசுங்கற கட்சிக்காரன். ஸ்வாமிகள் தப்பா எடுத்துக்கக் கூடாது'' என்றார்.

''புத்தி பெருசுதான். அதுல தப்பென்ன இருக்கு?''

அவரும் விடையளித்தார்.

''இல்ல... இவன் கொஞ்சம் பகுத்தறிவு அப்படி இப்படின்னு பேசுவான்.''

''ஒரு தப்புமில்லையே.''

அவர் எதனாலோ அனந்தகிருஷ்ணனை இழுத்து வைத்தே பேசினார்.

''ஆமாம். எப்படி பழத்துல விக்ரகம் வர்றது?''

அனந்தாவும் முதல் கேள்வியை கேட்டு விட்டான்.

''காந்தத்தை வேகமா சுத்தினா என்ன கிடைக்கும்?

''மேக்னட் பவர். அதாவது. காந்த மின்சாரம்.''

''அது கிடைக்கும்னு எப்படி தெரியும்?

''ஆராய்ச்சில தெரிஞ்சிண்டா.''

''அப்ப அது சம்மந்தமாபடிச்சு ஆராய்ஞ்சதுனாலதானே அது தெரிய வந்தது.''

''நிச்சயமா?

''இதுவும் அந்த மாதிரி படிப்புதான். இதுல இறங்கு உனக்கும் புரியும். இதுல இறங்காம உனக்கு நான் எவ்வளவு

சொன்னாலும் புரியாது.''

''அப்போ இது ஒரு சப்ஜெக்டா..?''

''ஆமாம் பாராசைன்ஸ். உங்க ஃபாரீன்ல அப்படித்தான் சொல்வர். இன்னும் சிலர் அக்கல்ட் சைன்ஸ்னு சொல்வா.''

''இதெல்லாம் ஃப்ராடு. பித்தலாட்டம்கறாளே.''

''அவா வாழ்க்கைல சாதாரண விஷயத்துல எல்லாம் தோத்துப் போனவாளா இருப்பா. அவர் அப்பிடித்தான் சொல்வா.''

''அப்படின்னா நான் இதை படிக்க விரும்பினா, படிக்க முடியும்னு சொல்லுங்கோ.''

''நிச்சயமா.''

''போதும் அனந்தா.. ஸ்வாமிகள்கிட்ட போய் சரிக்கு சரி பேசிண்டு. பின்னால எவ்வளவு பேர் நிக்கறா பார்.''

விஸ்வநாதன் கையைப்பிடித்து இழுத்துச் சென்றார். அனந்தா திரும்பித் திரும்பி பார்த்தபடியே சென்றான்.

# 6

*உலகில் உணர்வுகளில் தலையானது கருணை! கருணையை அன்பு என்றும், பரிவு என்றும், பாசம் என்றும் பலவாறு சொல்லலாம்.*

*கருணையின் பல வடிவங்கள்தான் அவை. இல்லை என்றால் அவன் மிருகமாகிவிடுவான்.*

மனிதன் ஒரு ஆறாவது அறிவுள்ள வினோத விலங்கு என்று ஒரு கருத்து உண்டு.

அவனை விலங்கினின்றும் வேறு படுத்துவதே கருணை சார்ந்த விஷயங்கள்தான். மிருகங்களிடையேயும் அன்பு உண்டு. ஆனால் அவை பசி என்று வரும்போது வேறுபட்டு விடும். உணவுக்காக ஒன்றையொன்று அடித்துக்கொள்ளும், உணவு கிடைத்து விட்டாலோ விஸ்ராந்தியாக அயர்ந்து விடும். கருணையைக் கொண்டு துக்கப்படவோ, இல்லை சந்தோஷப்படவோ அவைகளுக்குத் தெரியாது.

ஆனால் மனிதன் அப்படியில்லை. கருணை இல்லாத மனிதன் மிக ஆபத்தானவன். உலகில் அதற்கு உதாரணமாக பல சர்வாதிகாரிகளைக் கூறலாம். ஹிட்லர், முஸோலினி, இடிஅமீன் என்று ஒரு நீண்ட பட்டியல் அம்மட்டில் உண்டு. எனவே தான் கருணையே மனித குலத்தின் பிரதான உணர்வாகக் கருதப் படுகிறது. அதுமட்டுமல்ல. கடவுளின் உணர்வே கருணைதான். இதைத்தான் சிலுவையில் அறைந்த யேசுவிடம், கல்லால் அடிபட்ட நபிகளிடம், திரௌபதி மானபங்கப்படுத்தப்பட்ட போது ஓடி வந்த கண்ணனிடம் என்று நாம் வரிசையாக உணர்கிறோம்.

இறையாளர்கள் என்பவர்களும் கருணை மிகுந்தவர்களே. கருணை மிகுந்திருந்தால் தான் அவர்கள் முழுமையான இறையாளர்கள்.

தன்னை தரிசிக்க வரும் அன்பர்களின் துயரங்களை தன் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களை தன் கருணையால் ரட்சித்து துன்பம் நீக்கும் பல யோகிகள் இந்த மண்ணில் இருந்திருக்கிறார்கள்.

ஆறுகள்கூட கருணையின் சொரூபங்கள் தான். மனிதர்களின் பாவங்களை தாங்கள் ஏற்றுக் கொண்டு மனிதர்களை சுத்திகரிப்பதால் தான்...

பகவான் ரமணருக்கு புற்றுநோய் வந்தது. இறைவனுக்கே நோயா என்று ஊரே வியந்தது. அது இறைவனுக்கான நோயல்ல. நாடி வந்த பக்தர்களிடம் இருந்து கர்ம வினைகளை அவர் எடுத்துக் கொண்டார். அது ஒட்டு மொத்தமாய் திரண்ட நிலையில் புற்றாகிவிட்டது. ஆனால் அவர் அதனால் பெரிதாக துன்புறவேயில்லை. அவருக்கு சிகிச்சையளிக்க மருத்துவர்கள் முயன்றபோதெல்லாம் அவர் பெரிதாக ஒத்துழைக்கவேயில்லை. சதையை அறுத்துக் கட்டியை விலக்க முயன்றபோதும், மயக்க மருந்தெல்லாம் எடுத்துக் கொள்ளவில்லை. வலியை அவர் மிக நேசித்து உள் வாங்கிக் கொண்டார். இதை சாதாரண மனிதர்கள் செய்யமாட்டார்கள். செய்ய முடியாது. வாழ்க்கை பற்றி, உடம்பு பற்றி, உலகம் பற்றி நிறைய ஞானமிருந்தால்தான் இறை நிலை என்ன என்பது புரியும். புரிந்துவிட்டால் கருணை வந்துவிடும். உலகில் எவரும் பெரியவர் இல்லை. சிறியவரும் இல்லை என்பது முதல் அவர்கள் செயல் பாடுகளுக்குப் பின்னால் உள்ள விதிப்பாடும் விளங்கிவிடும். அந்த விதியில் ஆட்டுவிப்பில் தான் ஒருவர் நல்லவனாவது கெட்டவனாவது என்பது நிகழ்வதும் விளங்கி விடும். அந்த விதிப்பாட்டை கருணையுள்ள பார்வையால் மாற்ற நினைத்தால் மாற்றலாம். ஆனால் கர்மா தன் கடமையை செய்யாமல் விடாது. அதை தன்னிடம் செய்ய வைத்து அவரை விடுவிக்கலாம். கருணை உள்ளம் அதற்கு பிரதானம். கருணை உள்ளமே ஈசத்வத்தின் பிரதான குணம்.

**வீ**டு திரும்பிய அனந்தகிருஷ்ணன் திரும்பின நொடியில் இருந்தே அந்த சுந்தரானந்த ஸ்வாமிகள் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தான்.

ரம்யா காதுகளைப் பொத்திக்கொண்டாள். ''போறும்... ஊருக்கு புறப்படறத பத்தி யோசியுங்களேன். இந்த சாமியார் பெருமையெல்லாம் எனக்கு வேண்டாம். ஏற்கெனவே இந்த பூமில தெருவுக்கு ஒரு சாமியார். இவா அடிக்கற கூத்தைத்தான் பத்திரிகைல வாரா வாரம் போட்டு மானத்தை வாங்கறாளே.''

ரம்யா சடைத்துக் கொள்ள அனந்த கிருஷ்ணக்கு கோபமாக வந்தது.

''லுக்... நீ எதையும் நேர்ல பாக்காம பேசறது சரியில்லை ரம்யா.''

''வேண்டாம்... நான் பாக்கல. என் கேள்விக்கு பதில் சொல்லுங்கோ... ஊருக்கு எப்ப புறப்படப் போறோம்?

''இரு ரம்யா... இப்படி அவசரப்பட்டா எப்படி? ஆமா அண்ணா எங்க?''

''அவர் சமையக்கட்டுல காய் நறுக்கிண்டிருக்கார். இங்க நாம இருக்க, இருக்க அவருக்குத்தான் சிரமம்.''

''பைத்தியக்காரி, நீ போய் சமைக்கறதுக்கென்ன?''

''ஐ ஆம் எ டாக்டர்.. நாட் எ குக். என்னை எங்கப்பா அப்படி வளர்க்கலை.''

பொட்டில் அடித்த மாதிரி இருந்தது அவள் பதில், அது கசக்கவும் செய்தது.

''நான் ஒண்ணும் இங்க சமைக்க வரலை. உங்களுக்கும் பெருசா லீவு இல்லை. இரண்டு மூணு வருஷம் கழிச்சு வந்திருக்கேள். ஆனா ஒவ்வொரு நொடியையும் எப்படி உபயோகமா கழிக்கணும்னே தெரியல உங்களுக்கு.''

கோபம் வேறு அவளிடம் குமிழியிட்டது.

''போறும் ரம்யா... சௌத் ஆப்பிரிக்காவுல ஆம்பளை எல்லாம் சமைக்கமாட்டான். பொம்பளைதான் சமைப்பா. இங்க அண்ணாவை சமைக்க விட்டுட்டு நீ வேடிக்கை பார்க்கறது மரியாதையா இல்லை.''

''எனக்கு சமைக்கவே தெரியாதுங்கறேன்... அப்புறம் அதையே பேசினா என்ன அர்த்தம்?''

அவர்களுக்குள் வாக்குவாதம் வலுக்கும் போது விஸ்வ நாதன் வெளியே எட்டிப் பார்த்தவராக சமையல் கட்டை விட்டு வெளியே வந்தார்.

''என்ன சப்தம்.?''

''ஒண்ணும் இல்லண்ணா... எதுக்கு அண்ணா நீ போய் சமைச்சுண்டு.''

''வேற யார் இருக்கா... ரொம்ப நாள் கழிச்சு வந்துருக்கற உன்னை பட்டினி போடச் சொல்றியா?''

''ஐய்யோ... அதுக்காக நீ எதுக்கு சமையக்காரன் ஆகறே... ஹோட்டலுக்கு போய் சாப்டுண்டா ஆச்சு.''

''இது கிராமம்... எப்படி நீ அதை மறந்தே? இங்க எங்க இருக்கு ஹோட்டல்?''

''அண்ணா...''

''என்ன அண்ணா... சமையலை பொம்பளைதான் பண்ணனுமா? ஆம்பளை செய்யக்கூடாதா? நளன் பீமன்லாம் யார்?

விஸ்வநாதன் பதில் சொல்லி முடித்தது போல திரும்பி நடந்தார்.

ரம்யா அதை ரசித்தது போல சிரித்தாள்.

ஆனால் அது அனந்தகிருஷ்ணனுக்கு அவள் கேலியாக சிரிப்பது போல தோன்றியது.

''ரம்யா... நீ இவ்வளவு மோசமா இருப்பேன்னு நான் நினைக்கலை.'' என்றான் படுவேகமாக.

''நான் மோசமா?'' அவளிடம் அடுத்த க்ஷணம் ஆவேசம்.

''ஆமாம். அண்ணாவுக்கு எவ்வளவு பெருந்தன்மை. நீ என்னடான்னா சிரிக்கறே?''

''அவர் ஒண்ணும் பெருந்தன்மையை காட்டின மாதிரி எனக்கு தெரியல. நளன், பீமன்னு ஆம்பளை பெருமையை பீத்திண்டு போறார்.''

அவள் பதில் அனந்துவை மேலும் சிவப்பாக்கியது. ''ரம்யா... தொட்டுத்தொட்டு நீ தப்பாவே பேசிண்டு போறே.''

''ஆமாம்... இங்க நீங்க இருக்கறவரை அப்படித்தான் பேசுவேன். சாமியார் சாகஸம்னு நீங்க உளறலாம். நான் பேசக்கூடாதா.''

''நான்சென்ஸ்.. உனக்கு என்ன வந்தது? ஏன் இப்படி எல்லாம் நடந்துக்கறே?''

''வேண்டாம்... வார்த்தையை அளந்து பேசுங்கோ. அப்புறம் நானும் பேசுவேன்?''

''என்னத்த பேசுவே... எங்க பேசேன் பார்ப்போம்.''

அனந்தகிருஷ்ணன் தன்னிலை மறந்தான். அவளைத் தள்ளிவிட்டான். அவளுக்கு அது மேலும் எரிச்லை மூட்டியது.

''கையை வேற நீட்ட ஆரம்பிச்சுட்டேளா?''

''அறையக்கூட செய்வேன்.''

''எங்க அறையுங்கோ பார்ப்போம்.''

அவள் சொன்ன மறுநொடி ''பளார்'' என்று ஒரு அறை. அவள் காதுக்குள் ஈசல் பூச்சிகள் சப்தமிட்டுக் கொண்டு பறக்கிற மாதிரி இருந்தது.

அவள் அவனைத் தொடர்ந்து முறைத்துப் பார்த்தாள். சில வினாடிகளுக்குப் பிறகு விறுவிறுவென்று பக்கத்தில் இருந்த அறைக்குள் சென்றாள். திரும்பும்போது அவளது கையில் அவளது சூட்கேஸ்!

அனந்தகிருஷ்ணன் அதைப் பார்த்து மேலும் சூடானான்.

''கிளம்பு... போய்ண்டே இரு... இதுகெல்லாம் நான் பயப்பட மாட்டேன்.'' என்றான்.

அவளும் புறப்பட்டு வாசல்தாண்டி வீதியில் இறங்கி விட்டாள். காரில் ஏறினாள். அமர்ந்து அதை கிளப்பினாள். கார் உடனே சீற ஆரம்பிக்க, புழுதி பறந்தது. விஸ்வநாதன் பின்னாலேயே ஓடி வந்தார்.

''அம்மாடி நில்லு... நில்லு... நில்லு...'' பலனே இல்லை. அவள் கார் பறந்துவிட்டது. அடுத்து நேராக அன்ந்த கிருஷ்ணனிடம் வந்தார்.

''என்னடா அனந்தாஇப்படி பண்ணிட்டே?''

''பின்ன என்னண்ணா.... எனக்கும் பொறுமைக்கு ஒரு அளவு இருக்கோல்லியோ?''

''இல்லடா... உனக்கு யார்கிட்ட எப்படி நடந்துக்கணும்னு இன்னும் தெரியலடா.''

''தெரியலன்னா போய்ட்டு போறதுண்ணா.. நீ விலகு. என்னாலான உதவியை உனக்கு நான் பண்றேன்.'' அவன் அப்படிச் சொன்ன நொடி வானத்தில் இடி இடிக்கும் சப்தம் காதைக் கிழிக்கும் அளவு கேட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். விஸ்வ நாதன் வேகமாக கொல்லைப்புறம் நோக்கி ஓடினார். அண்ணாந்து வானம் பார்த்தார். அனந்த கிருஷ்ணனும் ஓடினான். அண்ணாந்தான். திபுதிபுவென்று கார் மேகக் கூட்டம். விஸ்வநாதன் முகத்தில் ஒரு புதிய ஒளி பரவ ஆரம்பித்தது.

''அனந்தா... ஸ்வாமிகள் வந்தா மழை வரும்னு சொன்னேன். ஆனா நீ நம்பலை. இப்ப பார்த்தியா?

அனந்தகிருஷ்ணனுக்கும் அந்த காட்சி ஆச்சரிய மாகத்தான் இருந்தது. அப்படியே ஒரு தற்செயல் சம்பவமாக இது ஏன் இருக்கக் கூடாது என்றும் ஒரு கேள்வியை அவனால் தவிர்க்க முடியவில்லை.

மேகக் கூட்டமோ தேர்த்திருவிழாக் கூட்டம் போல திமுதிமுவென்று வர ஆரம்பித்தது. காற்றும் சுழன்று, சுழன்று வீசத் தொடங்கியது.

ஒரு அசாதாரண மழை பெய்யப் போகிறது என்பதற்கான அறிகுறி அது!

வானில் பெரிதாய் ஒரு மின்னல் டிராகன் உருவம். எலெக்ட்ரிக் சாட்டை!

அப்பொழுது பார்த்து ராமகிருஷ்ணய்யர் வீட்டுக்குள் படபடப்போடு நுழைந்து கொண்டிருந்தார்.

விஸ்வநாதனும் கவனித்தார்.

''வாரும் ராமகிருஷ்ணன்.''

''வர்றது இருக்கட்டும். உம்ம தம்பி இவர்தானே?''

''ஆமாம் இவனே தான்.''

''டாக்டர்தானே?''

''ஆமாம்.. அதுல என்ன சந்தேகம்?''

''அப்ப உடனே இவரோட கிளம்புங்கோ.''

''என்னது ஸ்வாமிகளுக்கு உடம்பு சரியில்லையா?''

''ஆமாம்யா... வலியில துடிக்கறார்.''

''நம்பவே முடியலையே?''

''அவரும் மனுஷன்தானே... வலி துன்பம்லாம் எல்லார்க்கும் பொதுதானே? பேச நாழியில்லை. கிளம்புங்கோ.''

அவர் துரிதப்படுத்த அனந்தகிருஷ்ணனும் தயாரானான், வேகமாக அவரைத் தொடர்ந்து வாசலுக்கு வந்த போது படபட வென்று மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது.

ரம்யாவால் காரை டிரைவ் செய்யவே முடியவில்லை. எதிரில் அப்படி ஒரு புழுதிக்காற்று. காரின் முன்னால் கண்ணாடிச் சரிவின்மேல் விழும் தண்ணீரைத் துடைக்க வேண்டிய வைப்பரும் சண்டித்தனம் செய்து இயங்க மறுத்தது. காரை அப்படியே ஒரு ஓரமாய் நிறத்துவதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

உள்ளே அமர்ந்திருக்கும் நிலையில் சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம் மனித நடமாட்டமில்லை. மழையோ பிடித்துக்கொண்டு ஆட்டத் தொடங்கியது. ஒரு வினாடி அந்த சுந்தரானந்த ஸ்வாமிகளின் நினைப்பும் வந்தது. எல்லாம் அவர் வந்ததால்தானா? அனந்த கிருஷ்ணன் காதில் விழுந்த அவரது பிரபாவம் உண்மையோ..?

ரம்யாவுக்குள் காருக்குள் அமர்ந்து கொண்டு சிந்திப்பது என்னவோ போல் இருந்தது. எஞ்ஜினை ஆஃப் செய்ததில்

ஏ.சி. கட் ஆகி உள்பாகம் புழுங்கியது. கண்ணாடியை இறக்கினாலோ சாரல் உள்ளே அடித்து ஈரமாக்கப் பார்த்தது. உள்ளேயும் இருக்க முடியவில்லை. வெளியேயும் கடும் மழை. என்னதான் செய்வது? குழம்பிப் போனாள். அதே சமயம் மெல்லிசாய் மணி ஒன்று சற்று தொலைவில் இசையும் சப்தம். ஒருவேளை பக்கத்தில் கோவில் ஏதாவது இருக்கிறதா? நிச்சயமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படியா சப்தம் கேட்கும். சில விநாடி சிந்தித்தவள் காரை விட்டு இறங்கினாள். அதைச் சாற்றி பூட்டிவிட்டு மணி வந்த சப்தம் நோக்கித் திரும்பினாள். அடர்த்தியான வேலிக் காத்தான் செடி காடு! ஆனாலும் அதன் நடுவில் ஒற்றையடிப் பாதை. மணி சப்தமும் பலமாகக் கேட்டது.

கிட்டதான் இருக்க வேண்டும் என்கிற முடிவுடன் ஓடத் தொடங்கினாள்.

அவளது ஓட்டத்தின் முடிவில் அங்கங்கே சமாதிகள் தென்பட்டு அவள் ஒரு சுடுகாட்டுக்குள் புகுந்து விட்டாள் என்பதை சொல்லாமல் சொல்லின. அவளுக்கும் நடுக்கமாய் இருந்தது. சேற்றுக் குழம்பாய் மழைநீர்! அதில் காய்ந்த மாலைகள் மிதந்து வந்து அவளது காலை வளைத்தன. அவளுக்கு கூசியது. காலை உதறிக் கொண்டு தொடர்ந்து ஓடினாள். ஒரு தகரக் கொட்டகை கண்ணில் பட்டது. மழையிடம் இருந்து தற்காலிகமாக தப்பிக்க அது போதும் என்று தோன்ற வேகமாக அதனுள் புகுந்தாள். பிறகே தெரிந்தது அது ஒரு சுடுகாட்டு எரிமேடைக் கொட்டகை என்பது. ஒரு பிணம் எரிந்து அடங்கியிருந்தது.

ஒருவிதமான வாசம் வேறு. அங்கங்கே முழுவதும் பொசுங்கியிராத எலும்புத் துண்டுகள் வேறு. ரம்யாவுக்கு நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு ரகளையே நடப்பது போல பிரமை.!

நடுவில் திரும்பவும் அந்த மணி சப்தம்!

தொடர்ந்து அங்கே நிற்பதற்கு பதிலாக மணி சப்தத்தை இனம் கண்டு கொண்டு அங்கு போய்விடுவது நல்லது என்று தோன்ற அங்கிருந்தும் விலகி ஓடத் தொடங்கினாள். ஆனாலும் மழை ஈரத்திற்கு அந்த சடல நெருப்பு மிக இதமாக இருந்தது.

நடு நடுவே சமாதி மேடைகள். அங்கங்கே வழுக்கல்கள். அவளது செருப்பு ஒரு இடத்தில் அவளைப் புரட்டித் தள்ளியது. அப்படியே ஒடிந்து விழுந்தவள் தலை ஒரு சமாதியின் கூர்மையான முனை மேல் பட்டத்தில் ரத்தம் பீறிட ஆரம்பித்தது.

கையை நெற்றியருகே கொண்டு சென்றவள் பீறிடும் ரத்தத்தைப் பார்த்து மிரண்டு போனாள். சதை பிய்ந்து நெற்றி எலும்பை கைகள் உணர்ந்தன. பகீரென்றது. தொட்டுத் தொட்டு தப்புத்தப்பாகவே இப்படி நடக்கிறதே என்கிற கவலையுடன் தடுமாறிக் கொண்டு எழுந்தவள், ரத்தம் வழிய வழிய நடந்து ஒரு பெரிய மரத்தைக் கடந்த நொடி, அப்பால் ஒரு சிறிய காளி கோவில் தெரிந்தது. எட்டுக்கால் மண்டபம். நடுவில் ஒரு பெரிய யாக குண்டம். குண்டத்துக்கு அப்பால் உக்ரமான காளிசிலை! மண்டை ஓட்டு மாலையோடு

கையில் திரிசூலமுடன் காளி நிற்கும் கோலம் மிரட்டலாக இருந்தது.

மண்டபத்து மணிதான் மழைக்காற்றில் ஆடி ஆடி சப்தம் போட்டுக் கொண்டிருந்தது. காளி சிலையை பார்த்த நொடி தலையின் ரத்தப் பெருக்கை மீறிக் கொண்டு அப்படியே மயக்கம் வர ஆரம்பித்தது. அங்கிருக்கும் யாககுண்டத்தின் மேல் ஒடிந்து விழுந்தாள். ரத்தம் ஒழுகி உள்ளே ஓடி தேங்கிடத் தொடங்கியது! பக்கத்திலேயே ஒரு பாம்புப் புற்று போல ஒரு பாறை. அதில் ஒரு இடத்தில் அழகிய தமிழில் கல்வெட்டுச் செய்தி ஒன்று.

''ஸ்ரீ பத்ரகாளி இவள் நரமாமிசப்ரியை. தன்னையே தருவார்க்கு அன்னை அஷ்டமா சித்துகளும் அருள்வாள். விக்கிரமாதித்தன் இவளிடம்தான் சித்துகள் பெற்றான்'' என்றிருந்தது!

# 7

*ஈசத்வம் என்னும் இறை தன்மைக்கு எவ்வளவோ இலக்கணங்கள். அதில் பிரதானமானது நினைத்ததை முடிப்பது. யாரெல்லாம் உலகில் நினைப்பதை முடிக்கின் றாரோ அவர் இறைவர். ஆனால் அவர் அதை எப்படி உணர்கிறார் என்பதில் இருக்கிறது.*

*இறை தன்மையை இப்படி பொருள் செய்து கொள்ளும் அதேசமயம் கர்வம் கொண்டு அகங்காரத்துடன் நடந்து கொள்ளத் தொடங்கினால்*

இறைவன் அசுரனாகிவிடுவான்.

இப்படித் தான் ஹிரண்யகசிபுவும் நடந்து கொண்டான். பலவித வரங்களைப் பெற்று வல்லவனாக விளங்கிய ஹிரண்யனுக்குள் திடீரென்று ஒரு எண்ணம். உலகைப் படைத்து, தன்னையும் படைத்து, ரட்சித்த நாராயணன் எங்கிருந்து வந்தான்? அவனைப் படைத்தது யார்? அவன் தானே சுயமாக தோன்றியிருக்கும் பட்சத்தில் தன்னால் அப்படி தோன்றிட முடியாதா?

தான் எதற்கு நாராயணனை வணங்க வேண்டும்? தன்னை நாராயணன் வணங்கினால் எது குறைந்துவிடும்?

இப்படி அவனுள்ளும் கேள்விகள் எழும்பித் தளும்பின. அதன் விளைவு, தானே இறைவன்; தன்னாலும் இந்த உலகை ரட்சிக்க முடியும் என்று நினைக்கத் தொடங்கி விட்டான்.

அதன்பின் பலவித சட்டங்கள் போட்டான். எல்லா கோவில்களிலும் உள்ள தெய்வச் சிலைகளை அகற்றி தனது சிலைகளை வைக்க வேண்டும். தனக்கே அபிஷேக ஆராதனைகள். யாரும் எங்கும் ஓம் நாராயணா என்று கூறக் கூடாது. ஓம் ஹிரண்யகசிபுவே நமக! என்று கூற வேண்டும். தனக்கே அபிஷேக ஆராதனைகள். தனக்கே அர்ச்சனைகள். தானே இனி ஈரேழு பதினான்கு உலகுக்கும் கடவுள் என்று பிரகடனம் செய்வித்தான்.

ஆனால் கருணை இல்லாததால் ஹிரண்யன் மகன் பிரகலாதனே அவனுக்கு எமனாகிட நரசிம்மாவதாரமும் நிகழ்ந்தது.

இறைவனாதல் என்பதன் சூட்சுமப் பொருளை சரியாக புரிந்து கொள்ளாமல் பூஜிக்கப்படுவதையும், வணங்கப்

*படுவதையும் விரும்பியதால் வந்த வினை அது.*

*உண்மையில் ஈசத்வம் என்னும் இறை வளரும் தன்மையின் பின்புலத்தில் தியாகம் இருக்க வேண்டும். பொறுமை இருக்க வேண்டும். துளியும் கர்வமோ, புகழை விரும்பும் குணமோ கூடாது. குறிப்பாக பஞ்சம் பாதகம் செய்தவனுக்கும் அருளும் குணம் மிக மிக முக்கியம். அது இல்லாவிட்டால் இறை தன்மை என்பது அசுரத் தன்மையாகிவிடும்!*

**சு**ந்தரானந்த ஸ்வாமிகள் கோவில் மடப்பள்ளியிலேயே தங்கியிருந்தார். அனந்த கிருஷ்ணனை ராமகிருஷ்ணனும் அங்குதான் அழைத்துச் சென்றார். அனந்தகிருஷ்ணன் தான் ஒரு தேர்ந்த டாக்டர் என்பதற்கு தோதாக ஒரு சிறு மெடிகல் கிட்டை எப்போதும் வைத்திருப்பான். அது இப்பொழுது கை கொடுக்க மழையில் நனைந்த உடலோடு மடப்பள்ளியில் ஒரு ஓரமாக படுத்திருக்கும் சுந்தரானந்த ஸ்வாமிகள் அருகில் சென்றான். அவர் 'ராம.. ராம... ராம... ராம... என்று ராம ஜபம் செய்தபடி படுத்திருந்தார். முகத்தில் சன்னமாக துன்ப ரேகைகள் இருந்தும் சகித்துக் கொண்டு படுத்திருந்தார். ராம கிருஷ்ணனும் உள்ளே நுழைந்த நொடி குரல் கொடுத்தார்.

''ஸ்வாமி...''

அவரும் கண் திறந்தார்.

''டாக்டரை கூட்டிண்டு வந்துருக்கேன்.''

''அட... நான் வேண்டாம்னேனே. இந்த வலி கொஞ்ச நாழி இருக்கும். அப்புறமா சரியா போயிடும்.''

ராமகிருஷ்ணன் ரத்த எச்சில் பற்றி சொன்ன நொடி அனந்தகிருஷ்ணனுக்கு பகீர் என்றது. ''அப்படி எல்லாம் வருகிறது என்றால் நிச்சயம் விபரீதமாக ஏதாவதுதான் இருக்க வேண்டும்.

''ஸ்வாமி... அடிக்கடி இப்படி ஆறதா. இல்லை இன்னிக்குதானா?'' அனந்தா கேள்வியோடு கையை பிடித்து நாடி பார்த்தான். பின் கண் இமையை இழுத்துப் பார்த்த வனுக்கு பகீர் என்றது. வெளிரிப்போய் ஜீவனே இல்லாமல் இருந்தது.

''என்ன. கண்ணுல ரத்த ஓட்டமே இல்லையா?''

''ஆமாம்... உங்க உடம்புல சீரியஸா என்னவோ..?''

''கான்சர்ங்கறது சீரியஸான ஒண்ணு தானே?''

அவர் கேட்க, அப்பொழுதுதான் ராம கிருஷ்ணன் அந்த தகவலை அறிந்தவராக, ''ஸ்வாமிஈஈ...'' என்றார்.

''என்ன ராமகிருஷ்ணன். எதுக்கு இத்தனை பதட்டம்.''

''கான்சரை ரொம்ப சாதாரணமா சொல்றேளே.''

''பதறிண்டு சொன்னா மட்டும் அது போய்டுமா?''

''என்ன சாமி இது. நீங்க சொன்னா மழையே பெய்யறது. பாருங்கோ... சக்கை போடு போட்டுண்டு இருக்கறதை. அப்படிப்பட்ட உங்களுக்கு இந்த கான்சருக்கு மருந்து சாப் பிடறதும், இதை குணப்படுத்திக்கறதுமா பெரிய விஷயம்.''

''ஏன் படுத்திக்கணும்?''

''இல்லேன்னா உயிர்போய்டுமே.''

''பிறக்கும் போதே முடிவாற ஒரு விஷயம் அது தானே?''

''நீங்க இப்படி சொன்னா எப்படி? இந்த பூமியில நீங்கள்லாம் இருந்தாதானே, இப்படி மழை இல்லாத ஊர்ல மழை வரும். நல்லதெல்லாம் பெருகும்.''

''என்ன செய்யட்டும். நான் ரொம்ப நாள் இருக்கணும்னா என்னைப் பார்க்க எந்த வியாதியஸ்தரும் வரக்கூடாது. அவாளை நான் வரவேண்டாம்னு சொல்லிடமுடியுமா?''

''நீங்க சொல்றது எனக்கு புரியல.''

''இதெல்லாம் நான் என் பக்தர்கள்கிட்ட இருந்து எடுத்துண்ட விஷயம் ராமகிருஷ்ணன்.''

அவர் அப்படிச் சொல்லவும் தான் ராமகிருஷ்ணனுக்கும் புரிந்தது.

''ஆ... இதெல்லாம் பக்தர்களோட கர்மவினையா?''

''ஆமாம். முதல்ல ரமணர், அப்புறம் யோகிராம் சுரத்குமார், இப்ப நான்.''

''போகட்டும்... இதை குணப்படுத்த முடியாதா?''

''இந்த சரீரத்துக்கு அந்த சக்தி போயாச்சு. எனக்கு உங்க யாரோட சரீரமாவது கிடைச்சா ஒருவேளை நான் இன்னும் ஒரு நூறு வருஷம் வாழலாம்.''

அவர் சொன்னது அனந்தகிருஷ்ணனைக் கிள்ளியது. ஒரு ஊசி போட்டபடியே அவரை அதன் நிமித்தம்

பார்த்தான்.

''என்ன டாக்டர்... சரீரம் எப்படி கிடைக்கும். ஏதாவது உறுப்பு வேணும்னா கிடைக்கும். சரீரத்தை வாங்கி என்ன பண்றதுன்னு தோண்றதா?''

''ஆமாம். என் உடம்பும், இவர் உடம்பும் உங்களுக்கு எப்படி பயன்பட முடியும்?''

''ஏன் பயன்படாது. உங்க காரை நீங்கதான் ஓட்டணுமா? தள்ளி உக்காரச் சொல்லிட்டு நான் ஓட்டலாம் இல்லையா?''

''காரும் உடம்பும் ஒண்ணா என்ன?''

''எவ்வளவோ பொருத்தங்கள் இரண்டுக்கும் உண்டே.. இங்கேயும் காத்து. அங்க டயர்ல காத்து. இங்க ஹார்ட்ல பிளட் பம்ப்பிங். அங்க பெட்ரோல் பம்ப்பிங். இந்த பம்ப் பிங்கால நாம நடக்கறோம். அந்த பம்ப்பிங்கால அது ஓடுது. வயித்துக்கு சோறு போட்டுகிட்டே இருக்கிற மாதிரி அங்க பெட்ரோல் போட்டுகிட்டே இருக்கணும்.''

''ஸ்வாமி... இப்ப எதுக்கு இந்த ஒப்பீடெல்லாம். எங்களுக்கு நீங்க குணமானா போதும்.''

''ஆக்குங்களேன்... நானா வேணாங்கறேன்.''

அவர் அப்படிச் சொன்னதில் பலவித உட்பொருள். அவர் என்னவோ அனந்த கிருஷ்ணனுக்கு சவால் விடுகிற மாதிரிகூட இருந்தது.

''வாழைப்பழத்துல ஸ்வாமியை வர வழைக்கத் தெரிஞ்ச உங்களால உங்க வியாதிக்கு ஒரு மருந்தைதானா

வரவழைக்க முடியாது''

''முடியும் டாக்டர்... ஆனா கூடாது. தனக்குன்னு ஒரு விஷயத்தை செய்துக்கறவன் நல்ல யோகி இல்ல.''

''இல்ல... இது ஒரு வெட்டிச்சமாதானம்.''

''சரி... எப்படி வேணா சொல்லுங்கோ. உங்க உதவிக்கு நன்றி. இப்ப எனக்கு வலியும் குறைஞ்சாச்சு.''

''இது தற்காலிகமா தான் கேக்கும். உங்களுக்கு இம்மீடியட்டா ஒரு லேசர் சிகிச்சை கொடுக்கணும்.''

''ஒண்ணும் வேண்டாம். நான் இந்த ஊருக்கு வந்ததே மகாசமாதி ஆகத்தான். அது நடந்தா போதும்.''

''என்னது மகாசமாதி ஆகவா?'' அதிர்ந்தார் ராம கிருஷ்ணய்யர்.

''ஆமாம்... இது ஒரு விசேஷமான மண். விக்கிர மாதித்தனே இந்த மண்ணுல நடமாடியிருக்கான்னா பார்த்துக் குங்கோ.''

''நீங்க எங்க ஊர் சுடுகாட்டு கதையை சொல்றீங்களா?''

''ஆமாம்... அது கதை இல்ல. நிஜம்.''

''என்ன ஸ்வாமி நிஜம்? அங்க இருக்கற பாறைக் கல் வெட்டுப்படி ஒருத்தன் தன்னையே பலிகொடுத்தா அஷ்ட மாசித்தும் கிடைக்கும்னா எப்படி அது? தன் தலையை வெட்டிகிட்ட பிறகு முண்டம் தான் இருக்கும். அந்த முண்டத்துல உயிரும் இருக்காது. இல்லாத முண்டத்துக்கு முதல்ல உயிர் கிடைச்சா அதுவே பெருசு. அதுக்கப்புறம்

அஷ்டமா சித்துக்களையும் அடையறதுங்கறது.'' அனந்த கிருஷ்ணன் குரலில் சரியான ஏளனம்.

''அது சரி... உனக்கு அஷ்டமாசித்துன்னா என்னன்னு தெரியுமா?'' எழுந்து அமர்ந்தவராக ஒரு பெரிய கேள்வியை அனந்த கிருஷ்ணன் முன்வைத்தார் அந்த ஸ்வாமிகள்.

''கேள்விப்பட்ருக்கேன். ஆனா விலா வாரியா தெரியாது.''

''தெரியாத ஒரு விஷயத்துல கருத்து மட்டும் எப்படி சரியா சொல்ல முடியும்?''

அவர் கேட்டதும் நியாயம்தானே? அனந்தா திணற ஆரம்பித்தான். இருந்தும் சமாளித்தான்.

''இல்ல... பொதுவா இந்த சித்து மாயம்னாலே கண் கட்டுன்னு சொல்வா. அதான் அப்படி பேசினேன். நான் பேசினதுல தப்பு இருக்கறதாகவும் எனக்கு தெரியல. அந்த பலி கொடுக்கற விஷயம்லாம் ரொம்ப க்ரூயல். அதுலையும் சாமி கேட்டுதுன்னு நரபலி கொடுத்துக்கறது மகா மகா க்ரூயல்''

அவர் எதனாலோ ஒரு ஜோக் கேட்டது போல சிரிக்கத் தொடங்கினார். ராம கிருஷ்ணய்யர் எதற்கு இப்படி எல்லாம் பேசிக் கொண்டு என்கிற மாதிரி அனந்த கிருஷ்ணனைப் பார்த்து, ''அனந்தா... ஸ்வாமிகளிடம் எல்லார்கிட்டேயும் பேசற மாதிரி எல்லாம் பேசப்படாது. அது பாவம்'' என்றார். அதை ஸ்வாமிகளே மறுத்துத் தடுத்தார்.

''இல்ல ராமகிருஷ்ணன், விடுங்கோ! டாக்டர் சாருக்கு எவ்வளவு தெரிஞ்சிருக்கு. என்ன தெரியணும்னுல்லாம் பேசினாதானே தெரியும்?

''எனக்கு இந்த சித்து பத்துங்கறத பத்தியெல்லாம் எதுவும் தெரியாது. எல்லாமே கண்கட்டுன்னுதான் நினைக்கிறேன்.''

''என்ன அனந்தா. வெளிய மழை கொட்டிண்டு இருக்கு. சுவாமிகளோட மகிமைக்கு இதுக்கு மேல் சாட்சி வேணுமா என்ன?'' ராமகிருஷ்ணய்யர் இடை வெட்டினார்.

''ஏன் இது தற்செயலாகவும் இருக்கக் கூடாது?''

''இருக்கலாம்... இருக்கலாம்... அதுதான் உண்மை. என்னாலல்லாம் மழை பெய்யலை.''

சுவாமிகளே அதை ஆமோதித்தது தான் ஆச்சரியம். அனந்தகிருஷ்ணனையே அந்த பதில் என்னவோ செய்தது. ஆனால் ராம கிருஷ்ணய்யருக்கு புரிந்துவிட்டது. சுவாமிகள் அடக்கி வாசிக்க ஆரம்பித்துவிட்டது.

அனந்தா சற்று திருதிருவென விழித்தான். ''அடிக்கடி கண்கட்டு கண்கட்டுன்னேளே.'' சுவாமிகளிடம் மரியாதையும் வாஞ்சையும் கூடிப்போனது.

''அதுக்கும் எனக்கு பெருசா டெஃபனிஷன்லாம் தெரியாது. எல்லாரும் சொல்வா. அவ்வளவுதான் தெரியும்.''

''பெருசா தெரியாத, ஊரார் பேசற விஷயம் மேலல்லாம் பயங்கர நம்பிக்கை வைக்கற நீங்க, எதனால அழுத்தமா மறுக்க மாட்டேங்கறீங்க.''

''நல்ல கேள்விதான். இதுக்கு பதில் சொல்லணும்னா நான் கொஞ்சம் விலாவரியா பேசியாகணும்.''

''சும்மா பேசுங்கோ.''

''உங்க உடம்புக்கு இப்ப எப்படி இருக்கு?''

''போட்ட ஊசியாலதான் வலி ஓடி போயிடுத்தே?''

''நல்லது... என் அபிப்ராயத்தை சொல்லிடறேன். கடவுள்னும், நமக்குமேல ஒரு சக்தின்னும் இல்லைன்னா நாம எல்லாம் இப்படி இருக்கமாட்டோம்னுதான் நினைக்க றேன்.''

''எப்படி?''

''எவ்வளவோ விஷயங்களை முயற்சி செய்யறோம். அனா எல்லாமா சக்ஸஸ் ஆறது? சிலதான் ஆறது. பல முயற்சிகள் என்ன ஆறதுன்னே தெரியறதில்ல. சைன்ஸ் படி ஒரு விஷயம் செய்தா ஒரு விஷயம் கிடைக்கணும். ஆனா, வாழ்க்கைல இன் செர்ட்டரை அதிகம். அடுத்து எது, எப்ப, எப்படி நடக்கும்னு யாராலையும் சொல்ல முடியலை.

அவ்வளவு ஏன்.? சந்திர மண்டலம் எங்கையோ இருக்கு. செவ்வாய் கிரகம் எங்கையோ இருக்கு. அங்க போகத் தெரிஞ்ச மனிதனுக்கு இந்த மண்ணுல உயிரைக் குடிக்கற புத்து நோய்க்கு சரியான ஒரு மருந்தை கண்டுபிடிச்சு கொடுக்க முடியலையே. இப்படி எனக்குள்ள காலம் பத்தின சில அச்சங்களும் இருக்கறதாலதான், என்ன பெரிய மனுஷன். அவன் பவர்லாம் ஒரு லிமிட்வரைதான்கற

எண்ணமும் கூடவே இருக்கு. உண்மைல மனிதன் மட்டும் சர்வ சக்தி படைச்சவனா இருந்தா அவன் இப்படியா இருப்பான்.?''

அதிக உணர்ச்சிவசப்பட்டான் அனந்தா.

''எப்படி இருப்பான்?''

சுவாமிகளும் தொடர்ந்து ஆழம் பார்த்தார்!

''யார் எப்படி இருப்பாளோ தெரியாது. என் வரைல நான் மட்டும் கடவுளா இருந்தா இந்த மனித சமூகத்துல வியாதியே இல்லாம பண்ணிடுவேன். பாவம் என் மன்னி என்னை மார்மேலையும், தோள்லையும் போட்டு வளர்த்தவ. அவளும் இப்ப உங்கள மாதிரிதான். கேன்சர் வந்து நாளை எண்ணிண்டிருக்கா. என்னை சுத்தி யாருமே சந்தோஷமா இல்லை. நானே கல்யாணமாகியும் மனைவியை விட்டு பிரிஞ்சு இருக்கேன். என் மாமனார்,மாமியார்,அப்பா,அம்மா மன்னின்னு எல்லாரும் வியாதில இருக்கா, ஊர் அதுக்கு மேல் வறட்சியில இருக்கு. அந்த கடவுள் நிஜமா இருந்தா இப்படி எல்லாம் கஷ்டப்படுத்தி பார்க்கறதுல அவனுக்கு என்ன ஆனந்தம்?''

அனந்தகிருஷ்ணன் கண்களில் கண்ணீர் பீறிட்டது. கண்ணீர் என்பது எப்பொழுதுமே இதயத்தின் பாஷை, ஒருவருக்கு இதயம் இருக்கிறதா இல்லையா என்பதை கண்ணீரை வைத்தே கண்டுபிடித்து விடலாம். அழத் தெரி யாதவர்களைகூட விட்டுவிடலாம். ஆனால் அழ வேண்டிய சமயங்களில் அழாமல் அதை ஒரு பெரிய திடகாத்திரமாக

நினைத்துக் கொண்டு இறுக்கமாக இருப்பவர்களை மனிதர் களாக நினைப்பதேகூட தவறு. அனந்தாவும் தன்னிடம் இருப்பது இளகிய, பெரிய இதயம் என்கிற மாதிரி கண்ணீர் சிந்தினான். அப்படியே, ''என்ன பெரியமனித சக்தி. சந்தோஷம் என்பது, வந்து வந்தல்லவா போகிறது. ஒரு சந்தோஷத்தை கூட நிலையா வெச்சுக்க முடியலையே'' என்றான் கேவலாக. அவன் அப்படி கேட்டதில் ஆயிர மாயிரம் உட்பொருள்.

அவரோ கூர்மையாக பார்த்தபடி இருந்தார். அப்படியே ராமகிருஷ்ணய்யர் பக்கமாக திரும்பினார். மழையோ பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தது. ராமகிருஷ்ணய்யரிடம் ''நீங்கள் கொஞ்சம் வெளிய போய் இருக்கேளா... நான் இவரோட கொஞ்சம் மனம் விட்டு பேசணும்'' என்றார்.

அய்யரும் ஆச்சரிய மிகுதியோடு கிளம்பினார்.

அனந்தா, அவர் எதற்கு அப்படி சொன்னார் என்கிற மாதிரி அவரைப் பார்த்தான்.

''இப்ப உங்க உத்யோகம்?''

''நான் டாக்டர். அதான் ஊசியெல்லாம் போட்டேனே.''

''வெளிநாட்லயா?''

''ஆமா... தென் ஆப்பிரிக்காவுல! காண்ட்ராக்ட்பேஸ்ல வேலை பார்க்கறேன்.''

''நல்ல சம்பளமோ..?

''அப்படி சொல்றதுக்கில்லை... அதை இங்கையும் சம்பா

திக்கலாம். ஆனாலும் அங்க இருக்கற கிராமத்து மனுஷா ரொம்ப பாவம். கார் பஸ்ஸை பாக்காதவால்லாம் அங்க இருக்கா. அவாளை தேடிப்போய் மருத்துவம் பாக்கறதுல ஒரு ஆத்மதிருப்தி.''

''அதான் கல்யாணம் ஆகியும் இங்க வராம அங்கேயே இருந்துட்டேளா?''

''எப்படி வேணா சொல்லலாம்.''

''ஒரு விஷயம் தெரியுமா?''

''என்ன?

''உலகத்துல வலிங்கற துன்பம் நீக்கற அதிகாரம் கடவுளுக்கு பிறகு மருத்துவர்களுக்குதான் இருக்கு. ஒவ்வொரு மருத்துவனும் கடவுளோட பிரதிநிதி. நான் மட்டும் கடவுளா இருந்தா, கடவுளா இருந்தான்னு வருத்தப்பட்டேளே... நீங்களும் கடவுள்தான்!''

''இல்ல.. இது சும்மா ஒரு அலங்காரப் பேச்சு. அப்படியே இருந்தாலும் பவர்லெஸ் காட்னு சொல்லுங்கோ. பொருத்தமா இருக்கும்.''

''பவர்ஃபுல் கடவுளா மாறணுமா?''

''கேக்கறத பார்த்தா அதுக்கு வழிகாட்டப் போற மாதிரி தெரியறதே.''

''காட்றேன்... இதயம் முழுசா உள்ள, தனக்கென வாழாத ஒரு மனுஷனைத்தான் நான் தேடிண்டு இருக்கேன்.''

''நீங்க என்ன சொல்றேள்?''

''அஷ்டமாசித்துல ஏழு சித்து என் வசம். ஒண்ணு மட்டும் இன்னும் சித்திக்கல.''

''நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றேளே.''

''அதுக்கு காரணம் இருக்கு. எனக்கு இந்த உடம்போட வாழப்போற கால அளவு முடியப்போறது. நான் இந்த உடம்பை விட்டு போகப்போறேன். அதான் மகாசமாதி ஆகப் போறேன்னு சொன்னேன்.''

''ஆமாம் சொன்னேள்... ஆனா எதையும் முழுசா பேசாம கொள்ளாம பாதிபாதியாவே பேசறேள் நீங்க.''

''இப்ப முழுசாசொல்லிடறேன். இன்னிக்கு வந்துருக்கற மழை சத்தியமா எனக்காக வரலை''

அனந்தா அதிர்ந்தான்.

''அது உங்களுக்காகத்தான் வந்துருக்கு.''

''இது என்ன பேத்தல். நான் ரொம்ப சாமன்யன்''

''சமயங்கள்ல சாமான்யர்கள்கிட்டதான் கடவுள் பரிபூரணமா இருக்கார்.''

''சரி விஷயத்துக்கு வாங்கோ.. அய்யரை தனியா போகச் சொல்லிட்டு என்கிட்ட தனியா பேச என்ன இருக்கு.''

''நிறைய இருக்கு... நான் கடவுளா இருந்தா, நான் கடவுளா இருந்தாங்கற உங்களை கடவுளாக்கிட்டு நான் சமாதியாக விரும்பறேன்.''

''நான் கடவுளாகறதா... அது என்ன பட்டமா, பதவியா

நீங்க அதை எனக்கு தர?''

''ஒரு வகைல பட்டம்தான்... பதவியும் தான்! உங்களை கடவுளாக்கத்தான் மாகாளி பத்ரகாளியா இந்த ஊர் சுடுகாட்டுல கோயில் கொண்டிருக்கா.''

''முதல்ல நீங்க ஆக்கப்போறதா சொன்னேள்... இப்ப காளி ஆக்குவாங்கறேள்... எதுக்கு இத்தனை தடுமாற்றம்.''

''தடுமாற்றம் இல்லை... நானும் காளியும் சேர்ந்து அதை செய்யப் போறோம்.''

''நீங்க உளற ஆரம்பிச்சுட்டதா நான் நினைக்கறேன்.''

''மகா பெரிய ரகசியங்கள்லாம் முதல்ல உளறலாத்தான் தெரியும். அப்புறம்தான் அதோட சக்தி புரியும்.''

''மன்னிக்கணும்... இதுக்குமேல உங்க பேச்சைக் கேட்க எனக்கு பொறுமை இல்லை. ஒரு டாக்டரா வந்தேன். என் கடமையை செய்தேன். நான் கிளம்பறேன்.''

அனந்தா கிளம்பக் காலெடுத்தான்.

''ஒரு நிமிஷம்...'' தடுத்தார் அவர்.

அவனும் அலுப்புடன் அவரை ஏறிட்டான்.

''என் பிராணன் அடங்கறத்துக்குள்ற உங்களை ஒரு பெரிய அஷ்டமா சக்தியை உணர்ந்த கடவுள் மனிதனா ஆக்கணும்கறது தான் இப்ப என் ஆசை. ஏன்னா. அப்படி நீங்க ஆனா, இந்த உலகத்துல எவ்வளவோ பேருக்கு நல்லது நடக்கும்னு நான் நம்பறேன்.''

''போறும் ஸ்வாமி... அஷ்டமாசக்தி, ஆட்டுக் குட்டின்னுண்டு. என்னை விடுங்கோ.''

''கொஞ்சம் என் பேச்சகேளுங்கோ... எது அஷ்டமா சக்திங்கறது உங்களுக்கு விள்ங்கிடும்.''

''நம்பற மாதிரியே பேசமாட்டேளா?''

''கொஞ்சம் என் பேச்சைக் கேளுங்கோ... இந்த ஊர் பத்ரகாளி... வரப்ரசாதி. தன்னையே அவளுக்கு பலியா கொடுக்கறவனுக்கு அவன் கேட்டதை எல்லாம் அவ கொடுப்பா... குறிப்பா அஷ்டமாசித்துவையும் உடனடியாக கொடுத்துடுவா.''

''என்ன சொல்றேள்... நான் என்னை பலி கொடுக்கணுமா?''

''ஆமாம்... தியாகத்துல பெரிய தியாகம் அது. பட்டியும், விக்ரமாதித்தனும் அப்படித் தங்கள் தலையை தாங்களே கொடுத்துதான் இரண்டாயிரம் வருஷம் இந்த பூமியை ஆள்ற வரத்தையெல்லாம் வாங்கிண்டா.''

''அதெல்லாம் கற்பனைக் கதைல.''

''இல்ல நிஜம்... என் வரைல விக்ரமாதித்தனுக்கு பிறகு உங்களுக்குதான் அந்த பாக்யம் கிடைக்கப் போறது.''

''புரிஞ்சு போச்சு... என்னை நீங்க பலி கொடுக்கப் போறீங்கன்னு சொல்லுங்கோ.''

''பலிகொடுத்து கடவுளாக்கப் போறேன்...''

''புடலங்கா... இப்பத்தான் உங்களைப் பத்தியே எனக்கு

புரியறது. உங்களை என்ன உங்களை. உன்னை ரம்யா உன்னைப் பத்தி சொன்னது சரிதான்.''

அனந்தகிருஷ்ணன் வெடிக்க ஆரம்பித் தான்.

''நீங்க என்ன பேசினாலும் எனக்கு கோபம் வராது. ஏன்னா பொறுமை இல்லாமலும், கருணை இல்லாமலும் போனதால தான் என்னால அந்த தெய்வநிலையை அடைய முடியல. எனக்கு கிடைச்ச சித்துகளால பணம் சம்பா திச்சேன். புகழ் சம்பாதிச்சேன். ஆனா அதெல்லாம் இந்த ஜென்மத்துக்கு மட்டும்தான். உயிர்போன பின்னே எனக்கு மோட்சமில்லேங்கறது புரிஞ்சது. அது எனக்கு கிடைக் கணும்னா உங்களை கடவுளாக்கினா போறும். அந்த ஒரு புண்ணிய காரியம் என்னை மோட்சத்துக்கு கொண்டு போய்டும்.''

சுந்தரானந்த ஸ்வாமிகள் பேசுவது ஒரு பக்கம் உண்மை போலவும் இருந்தது. இன்னொரு பக்கம் சினிமா டயலாக் மாதிரியும் இருந்தது.

ஆனால் அனந்தகிருஷ்ணனோ தான் ஒரு போலிச் சாமியாரிடம் மாட்டிக் கொண்ட மாதிரி உணர்ந்தான். அங்கிருந்து நழுவக் காலெடுத்தவன் முன்னால் அவர் பொடி போல் ஒன்றை எடுத்து ஊதினார்.

அடுத்த நொடி அவன் மயங்கி கீழே விழ ஆரம்பித்தான். அதைத் தொடர்ந்து அவனை அப்படியே இழுத்துக் கிடத்தியவர் இரு கைகளையும் தட்டினார். திரும்பி வந்தார் ராமகிருஷ்ணய்யர்.

அவருக்கு அனந்தகிருஷ்ணன் கீழே கிடப்பது அதிர்ச்சியை தந்தது.

''ஸ்வாமிஈஈ...'' அலறினார்.

''பயப்பட வேண்டாம்... இருட்ட ஆரம்பிச்சாச்சு. விடியறதுக்குள்ற நான் சில நல்ல காரியங்களை செய்துட்டு மகா சமாதி ஆக விரும்பறேன். நீங்க எனக்கு ஒரு உபகாரம் செய்யணும்.''

''என்னென்னவோ சொல்றேளே...''

''சொல்றதைச் செய்யுங்கோ...''

''பெரியவா பல காலம் இருக்கணும்கறது எங்க ஆசை.''

''இருப்பேன்,இதோ இந்த அனந்தகிருஷ்ணன் ரூபத்துல.''

''அப்படின்னா.''

''நான் சொல்றத முதல்ல நீங்க செய்யுங்கோ. உங்களுக்கு உசிதப்பட்ட ஒரு இடத்தில் பத்தடிக்கு பத்தடி ஆழத்துல ஒரு குழியை வெட்டி அதை மூடறதுக்கு தோதா சிமெண்ட் ஸ்லாப்களோட தயாரா இருங்கோ. காலம்பற நான் உங்களை தேடி வருவேன்.''

''ஸ்வாமிஈஈ...''

''தயவு செய்து போய் நான் சொல்றத செய்யுங்கோ...''

''இல்ல... என்னால முடியாது''

அவர் மறுத்த நொடி அவரை உற்று ஒரு பார்வை பார்த்தார். அவருக்குள் இருக்கும் ஏழு சக்திகளுள் ஒன்றான

வசித்வத்தால் அய்யரை அப்படியே கட்டுப்போட்டு மனசுக்குள் பேசினார்.

''போராமகிருஷ்ணா... போய் சொன்னதைச் செய்..''

அதன்பின் ராமகிருஷ்ணனும் எதுவும் பேசவில்லை. திரும்பி ஓடினார். ஸ்வாமிகளும் அனந்தகிருஷ்ணனை நெருங்கி அவனது நாடியைப் பிடித்துப் பார்த்தார். அது, அவர் தூவிய விஷப்பொடியால் அவன் உடம்பில் மெல்ல உஷ்ணத்தை அடக்கிக் கொண்டிருந்தது. அவ்வளவு நாடி களும் ஒவ்வொன்றாக அடங்கிக் கொண்டே வந்தன.

இறுதியாக ஒரு நாடியில், சில நிமிடங்களில் துடிப்பு அடங்கிவிடும் எனும் நிலையில், அந்த மடப்பள்ளியில் கிடந்த விறகுக்கட்டைகளுக்கு அப்பால் போய் படுத்துக் கொண்டு மேலே விறகுக் கட்டைகளை உருண்டு விழுமாறு செய்து அதில் மூழ்கிப் போனார்.

அடுத்த நொடி பிராகாமியம் என்னும் கூடுவிட்டு கூடு பாயும் சித்துவால் அவரது உயிர் அவர் உடம்பில் இருந்து வெளியேறி தரையில் இறுதி நாடியும் அடங்கக் காத் திருக்கும் அனந்தகிருஷ்ணன் உடம்புக்குள் புகுந்தது. அடுத்த சில நொடிகளில் உடம்பின் அவ்வளவு நாடிகளும் வேகமாக இயங்க வயிற்றில் மூச்சுக்குழல் வழியாக உள் புகுந்திருந்த அந்த விஷப்பொடி, ஒரு வாந்தி வடிவில் வெளிப்பட்டு தரையில் பரவியது.

அனந்தகிருஷ்ணனாகிய ஸ்வாமிகளும் உடம்பை ஒரு உதறு உதறிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். மழை

கொட்டிக் கொண்டிருப்பதால் ஊர் அடங்கியிருந்தது. அது அவருக்கு சௌகர்யமாகிவிட்டது. நெஞ்சில் கை வைத்து சுடுகாட்டை நினைத்த நொடி அவரது தேகம் சுடுகாட்டு பத்ரகாளி சன்னதி முன்தான் இருந்தது.

முன்னே உள்ள யாகக்குண்டத்தின் மேல் ரம்யா கிடந்தாள். அவளது நெற்றி ரத்தம் குண்டத்தில் ஒரு செம்பில் மொள்ளலாம் என்கிற அளவு தேங்கியிருந்தது.

கணவனுக்கு முன்பே மனைவியிடம் ஏதோ ஒரு விதத்தில் அந்த பத்ரகாளி ரத்தத்தை காணிக்கையாக வாங்கிக் கொண்ட மாதிரி தோன்றியது. நேரே காளி விக்ரகத்தைப் பார்த்தார்.

அணைந்து விடுவதுபோல ஒரு சுடர் விளக்கின் ஒளியில், ஒரு இருள் பிம்பமாக தெரிந்தாள் காளி. அவர் பார்வை உடனே அருகில் இருந்த பாறைக்கல்வெட்டு பக்கம் சென்றது.

விக்கிரமாதித்தனுக்கு பிறகு ஒருவனுக்கு கூட தன் உயிரைத் தரும் தைரியம் இல்லை. அந்த கல்வெட்டையே ஒரு மனித தந்திரமாகத்தான் நினைத்தார்கள். ஏன்... சுந்தரானந்தனாக இருந்த தனக்குகூட அன்னையிடம் தன்னை பணயம் வைக்க தைரியம் வரவில்லையே. இப்பொழுது வைக்கலாம்தான். தெளிவும், ஞானமும் வந்துவிட்டது. ஆனால் செல்லரித்த கான்சர் உடம்பையா அவளுக்கு காணிக்கை யாக்குவது? எப்படியும் போய்விடப் போகிற ஒரு உயிரைக் கொண்டு ஒரு பெரிய வரத்துக்கு முயல்வது ஏழு

சக்திகளை அடைந்துவிட்ட தனக்கு அழகல்ல என்றும் தோன்றியது. அதேசமயம், அந்த சக்திகளால் புற்றை குணப்படுத்திக் கொண்டு இன்னும் சில காலம் வாழ்வதற்கு அனந்த கிருஷ்ணன் போல ஒரு ஆரோக்கியமானவன். உடம்பில், அவன் வடிவில் சேவை செய்வது உத்தமம் என்றும் ஒரு எண்ணம். அதுதான் இப்பொழுது அவரை தள்ளிக் கொண்டு வந்து காளிமுன் நிறுத்தியுள்ளது.

''தாயே... உன்னை நம்பாத மனிதக் கூட்டத்துக்கு நடுவே பரிபூரண நம்பிக்கையோடு என்னையே பலியாய் கொடுக்க நான் முன்வந்துள்ளேன். என் சிரமலரை எற்றுக் கொள். உன் தரிசனம் போதும்... ஏற்கெனவே நான் ஏழு சக்திகளை அடைந்துவிட்டேன். உன் அருளால் என்னை இறைவ னாக்கு. ஆம்... என்னையும் உன் போலாக்கு. அதுவே என் வேண்டுகோள்.'' என்று கை கூப்பி தியானித்தவர், கொண்டு வந்திருந்த கத்தியை எடுத்து முன் கையை மார்புக்கு நேராக வைத்துக் கொண்டு சற்றே தலையை சாய்த்து பின் கழுத்தில் ஆரம்பித்து மளமளவென்று அறுத்துக் கொள்ளத் தொடங் கினார்.

குருதியும், குபுகுபுவெனப் பீறிட்டு வழிய சிரம் வெட்டுப்பட்டு முன்னால் மார்பு முன் விரித்திருக்கும் கையில் விழுந்தது.

அடுத்த நொடியே அம்பிகை பிரசன்னமாகிவிட்டாள். வெட்டப்பட்டு கைமேல் விழுந்த தலையும் திரும்பச் சென்று கழுத்து மேல் பழையபடி பொருந்திக் கொண்டது.

கண்களும் திறந்தன.

எதிரிலோ மாகாளி!

பன்னிரு கைகளுடன், மண்டை ஓட்டு மாலையுடன்...

''அம்மா... தாயே!''

அப்படியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

''நீ கேட்ட அனைத்தையும் அளித்தோம்: அஷ்டமா சித்துலேயே உன்னதமான இறை தன்மை இந்த நொடி முதல் உன்னிடம் செயல்படத் தொடங்கும். அணிமா, மஹிமா முதல் அவ்வளவும், உன்னிடம் ஊற்றெடுக்கும். இந்த உலகம் உன்னை எண்ணி வியக்கும். நீயே இறையானதால் இறந்து விட்டவர்க்குக்கூட உயிர்தர உன்னாலாகும். ஆயினும் கர்ம வினைகளுக்கும் நவமர்களுக்கும் யாதொரு பங்கமின்றி உன் கருணையால் இந்த உலகை ரட்சிப்பாயாக.'' என்றவள் அடுத்த நொடியே மறைந்து விட்டாள்.

அனந்தகிருஷ்ணனாகிய ஸ்வாமிகளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

# 8

*கங்கைக் கரையில் ஒரு சன்யாசி ஒரு வார்த்தை பேசமாட்டார். மௌனம்தான் அவரது பாஷை! பத்ரிநாத்தில் ஒரு படித்துறையில் தரிசனம் செய்த ஒருவர், பின் அங்கிருந்து விமானம் மூலம் மானசரோவர் செல்ல நேபாளம் சென்றபோது அங்குள்ள ஆலயங்களுக்கும்*

சென்றார். அந்த ஆலயத்தில் அவருக்குமுன் அந்த சன்யாசி நின்று வணங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு மிக ஆச்சரியமாகி விட்டது.

அதன்பின், ஒரு நான்கு நாள் பயணத்தில் கைலாச மலையை எட்டி அங்கே "பரிக்ரமா" என்னும் யாத்திரை வலம் செய்யும் பொழுது அங்கும் அந்த சன்யாசி தெரிந்தார். அதிர்ச்சியாகிவிட்டது. அங்கிருப்பவர்கள் அவர் மூன்று நாட் களாக பரிக்ரமா செய்கிறார் என்றனர். அது மேலும் அதிர்ச் சியை உருவாக்கிவிட்டது.

இது எப்படி சாத்தியம்? என்ற கேள்விக்கு அவரோ வாயைத் திறந்து எதையும் பேசவோ, யாரையும் கவரவோ முயலவில்லை.

இறுதியில் கோவில் குருக்கள் ஒருவர் சொன்னார்.

'இந்த மலையில் தென்படும் சன்யாசிகள் மிகப்பெரிய சக்தி வாய்ந்தவர்கள். ஒருவர் தினமும் கைலாசம் சென்று சிவபெருமானிடம் அமர்ந்து தாயம் விளையாடிவிட்டு வருபவர்.

நாரதருடன் உலகம் முழுக்க சுற்றி வருவார். ஆஸ்தி ரேலியாவில் ஒரு ஊரில் இருக்கும் ஒருவர், வெள்ளத்தில் சிக்கப் போவதை அவர் உறவினர் இங்கே வந்தபோது அவரிடம் நேரில் கூறி போய் அவரை வேறு ஊருக்கு போகச் சொல் என்றவர். காலம் நேரம் என்கிற பரிமாணங்களை மீறியவர்கள் இவர்கள். பசியும் தாகமும்கூட கிடையாது. பஞ்ச பூதம் இவர்கள் சொன்னபடி எல்லாம் கேட்கும். சில சருகுகளை அள்ளிப் போட்டு உற்றுப் பார்த்தாலே தீப் பிடித்துக் கொள்ளும். அதில் அழகாக குளிர்க்காய்வார்கள். சரி, குளிர் வெய்யிலுக்கு அடங்காத உடம்புதான் இவர்களுக்கு என்று

*நாம நினைத்தாலோ அடுத்த நொடியே அதற்கு நேர் எதிராக ஒரு பனிக்குகைக்குள் பொட்டுத் துணியின்றி போய் நிஷ்டையில் அமர்ந்து விடுவார்கள். இவர்களை புரிந்து கொள்ள மனிதர்களுக்கு அறிவோ, சக்தியோ போதவே போதாது.' என்றார் அந்த கோயில் குருக்கள். இப்படி புதிர்களான விஷயங்கள்தான் இந்த தேசத்தில் எத்தனை.. எத்தனை...!*

***வி***டிந்துவிட்டது!

கண்களைத் திறந்த அனந்த கிருஷ்ணனுக்கு ஒரு புதிய உலகம் கண்ணில் தெரிவதுபோல ஒரு பிரமை, அதேசமயம் அவர் எதிரில் அண்ணா விஸ்வநாதன் குளித்து முடித்த வராக, உடம்பு முழுக்க விபூதிப் பட்டையுடன் ஏதோ கோவிலுக்கு போக கிளம்பி விட்டவர் போல தெரிந்தார்.

''அண்ணா...''

''எழுந்துட்டையா?''

''உனக்கு தெரியாதா...''

''என்ன..?''

''சரிதான்... ராத்திரி ரம்யாவை தூக்கிண்டு கொட்டற மழைல நீவந்ததைப் பார்த்து நான் உனக்கு தெரியும்னுல்ல நினைச்சேன்.''

''நீ என்ன சொல்றே.?''

''நம்ம ஊருக்கு ஒரு ஸ்வாமிகள் வந்தாரோல்லியோ..''

''யார்... அந்த சுந்தரானந்த ஸ்வாமிகளா?''

''அவரேதான்... அவர் இப்ப மகாசமாதி ஆகப்போறார். ஊரே இந்த நம்ம குருக்கள் ராமகிருஷ்ணய்யர் தோட்டத்துலதான் இருக்கு. நானும் அதுக்குத்தான் போய்ண்டு இருக்கேன்.''

''அப்படியா... மகாசமாதியாறதுன்னா என்ன?''

''வந்து பார்... தெரியும்! இந்த ஊர் செஞ்ச புண்ணியம். அவர் இங்க சமாதி ஆகறார். இனி இது ஷேத்ரம் ஆயிடும்.''

''என்னென்னவோ சொல்றியேண்ணா... ஆமா நான் ரம்யாவோட ராத்திரி வந்தேன்னியே... ரம்யா கோவிச்சுண்டு ஊருக்கு போகலை?''

''என்னடா... என்ன உளர்றே? ரத்தம் சொட்டச் சொட்ட அவளை கொண்டு வந்து போட்டு வைத்தியமும் பார்த்துட்டு ஒண்ணுமே தெரியாத மாதிரி கேக்கறே.''

அனந்தகிருஷ்ணன் நெற்றியை தேய்த்துக் கொண்டான். அறைக்குள்ளும் எட்டிப் பார்த்தான். ரம்யா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஆச்சரியமாக இருந்தது. கோபித்துக் கொண்டு போனவள் எப்பொழுது திரும்ப வந்தாள். தலையில் அடி, உடம்பில் காயம் என்றெல்லாம் சொன்னது எந்த அளவு சரி... கிட்டே நெருங்கிப் பார்த்தபோது தலையில் துணிக்கட்டு

''யார் போட்டது இப்படி... கசாமுசா வென்று!''

அனந்தகிருஷ்ணனுக்கே அந்த துணிக்கட்டு உறுத்தியது. பிரித்தாலோ நெற்றியில் காயம் பட்ட தடயமே இல்லை.

''என்ன இது? ஒரு தடயமும் இல்லை. காயம் என்று கட்டுப் போடப்பட்டிருக்கிறதே! என்னை ஏமாற்ற ரம்யா விளையாடுகிறாளா?'' அனந்தகிருஷ்னன் மனக் கேள்வி களுடன் அவள் தலையை கோதிவிட்டபடி, அவளையே உற்றுப் பார்க்க அவளும் ஏதோ ஒரு மின்சாரம் தன் மேல் பாய்ந்துவிட்டது போல மளுக்கென்று கண் விழித்தாள். அவனை, காணாத ஒருவனை காணுகின்ற மாதிரியும் பார்த்தாள்.

''என்ன ரம்யா.. எதுக்கு அப்படி பாக்கறே?''

''என்னை மன்னிச்சிடுங்கோ.''

''எதுக்கு?''

''உங்க அருமையும் எனக்கு தெரியல... அந்த ஸ்வாமி பெருமையும் எனக்கு தெரியலை.. அதுக்குத்தான்!''

''என்ன எனனென்னமோ சொல்றே?''

''என்னை தயவு செய்து ஆழம் பாக்காதேள். நீங்க இப்ப சாதாரண மனுஷன் இல்ல. நினைச்ச நொடி சௌத் ஆப்பிரிக்காவுக்கும், சென்னைல இருக்கற எங்காத்துக்கும் போறவர். உங்களோட சேர்ந்துண்டு நானும் வந்ததை நினைச்சா எனக்கு பிரமிப்பா இருக்கு.. அஷ்டமாசித்துவோட சக்தியை நொடிப்பொழுதுல உங்களை வெச்சு தெரிஞ் சுண்டேன்.''

''என்ன உளர்றே... நீ சொல்றதெல்லாம் நான் கண்ட சொப்பனம். அசந்து தூங்கின தூக்கத்துல எனக்குள்ற ஒரு

சாமியார். அதான் அந்த சுந்தரானந்தா நுழையறார். அப்புறமா காளிகோயிலுக்கு போறேன். தலையை வெட்டிக் கறேன். காளியும் வரா.. எனக்கு வரமும் தரா.. நீ கூட அங்க ரத்த விளாறாகிடந்தே. உனக்கு நான் வைத்தியமும் பண்ணினேன். இதெல்லாம் சொப்பனம்... அதாவது ட்ரீம்.''

''அப்படியா... கனவா இருந்தா எனக்குப் பட்ட அடி எப்படி இவ்வளவு வேகமா குணமாச்சு. அவ்வளவு ஏன். சிரஞ்சீவி மூலிகை தோட்டத்துக்கே உங்க மன்னியே கூட் டிண்டு போய் மன்னிக்கு அந்த மூலிகையை கொடுத்து கூட்டிண்டு வந்துட்டேளே. அதெல்லாமும் கனவுதானா?''

அனந்தா தலையை தேய்த்துக் கொண்டான். அப்படியே திரும்பி மாடிப்படி ஏறி மன்னி ரூமுக்குள் போனான்.

கிழிந்த இலையாய் கிடந்தவள் அப்படியே உருமாறியிருந்தாள். முகத்தில் ஒரு புது பொலிவு. குளித்து முடித்து குங்குமமெல்லாம் வைத்திருந்தாள்.

''அனந்தா..'' என்று அவனையும் பார்த்து நெகிழ்ந்தாள்.

''மன்னி...''

''எவ்வளவு பெரிய மனுஷன்ப்பா நீ... இல்லையில்ல.. நீ நடமாடற கடவுள்.''

''மன்னி... என்ன இது? நான் சாதாரண அனந்தா.. அவ்ளோதான்!''

''சாதாரண அனந்தாவா.. யசோதா வளர்த்த கிருஷ்ணன் மாதிரிடா நீ! நான்தான் அந்த யசோதா. நீ சாட்சாத்

கிருஷ்ணனே தான். வாய்க்குள்ற உலகத்தையே காட்டி யசோதையை அந்த கிருஷ்ணன் திக்கு முக்காட வெச்சான். நீயோ பல உலகங்களுக்கு என்னை கையைப் பிடிச்சே கூட்டிண்டு போனே. இன்னும் எதையும் நான் அவர்கிட்ட சொல்லலை. அவர் மட்டும் நான் சொல்லப் போறத கேட்டா மூக்குமேல விரலை வெச்சிடுவார். அப்படியே உன் அப்பா, அம்மா, மாமனார், மாமியார்னு எல்லாரையும் குணப்படுத்தி உலகத்துலயே யாரும் நோய் நொடியில்லாம செய்யனும்..."

தலையை வருடியபடி வாஞ்சையாக புதிய தெம்போடு பேசினாள் மன்னி ஜானகி. ஒரு கனவுதானே தான் கண்டது. இவர்கள் ஒருவேளை ஒன்று சேர்ந்து ஏப்ரல் ஃபூல் ஆக்க நினைக்கிறார்களோ..?

அனந்தா நேராக சென்று காலண்டரைப் பார்த்தான்.

**ம**கா சமாதிக்கான குழிமுன் ஒரே கூட்டம்!

ஸ்வாமிகளும் குழிக்குள் இறங்கி பத்மாசனமிட்டு அமர்ந்து ஜெபமாலையையும் உருட்டத் தொடங்கிவிட்டார். அந்த மாலை உருளுவது நிற்கும்போது, அவரும் மோட்சம் தொட்டுவிட்டது தெரியும். அதன்பின் உப்பையும் வெல்லத் தையும் போட்டு சமாதியை மூட வேண்டியதுதான்.

ஊரே அந்த அரிய காட்சியை வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்தது. மாலையை உருட்டியபடி கண் மூடப் போன சுந்தரானந்தர் விஸ்வநாதனை மட்டும் அருகே அழைத்து காதோரமாக சொல்லத் தொடங்கினார். "இங்க

உடம்பு மட்டும்தான் அடங்கப்போறது. என் ஆன்மா உன் தம்பியை வழிநடத்தும்''

விஸ்வநாதனுக்கு திக்கென்றது. அந்த நாத்திகனையா? என்று கேட்கத் தோன்றியது. ஆனால் அதற்குள் ஜெபமாலை உருட்டல்கூட நின்று அவரது ஆன்மாவும் பிரிந்துவிட்டது.

துளிர்த்துவிட்ட கண்ணீரோடு மேலே மூடி பிருந்தாவனம் எழுப்பும் பணியில் மற்றவர்கள் தயாராக, விஸ்வநாதன் மட்டும் ஸ்வாமிகள் சொன்னதில் ஏதோ அர்த்தம் இருக்கும் என்பதுபோல அனந்தகிருஷ்ணனைப் பற்றி நினைக்க ஆரம்பித்தார்.

வீட்டில் அதுவரை கனவுகள் என்றே பேசிக் கொண்டிருந்த அனந்தகிருஷ்ணனிடமும் சட்டென்று ஒரு மாற்றம்! எதுவும் பேசாமல் வீட்டு பூஜை அறை முன் போய் பத்மாசனமிட்டு அமர்ந்தான்! பூஜிக்க ஆரம்பித்தான்.

ரம்யா அதைப் பார்த்து கண்ணீர் உகுக்க ஆரம்பித்தாள்.

தன் கணவன் ஒரு கடவுள் என்பதால் வந்த ஆனந்தக் கண்ணீரா. இல்லை, தனக்கு இனி அவன் சொந்தமில்லை என்பதால் வந்த துக்கக் கண்ணீரா. என்பதுதான் சரியாகத் தெரியவில்லை!

(முற்றும்.)

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY



Do you enjoy reading but can’t get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்